Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


தினமுரசு

THINAMURASU



ரா
ம்
கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)


முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 14 புதன்கிழமை (31.08.2011) பக்கங்கள் 16 ஓசை - 336



இளைய தலைமுறைக்கு வாசிப்பு... 04



ரணில் அனுப்பி எஸ்.எம்.எஸ் 08



ஐ.பி.எம்.இன் புதிய சிப் 13



விபத்துகளுக்கு அரசே பொறுப்பு 14

# அமைதிக்கு அச்சுறுத்தல்; தடுத்து நிறுத்த உழைப்போம்



## அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

(கொழும்பு)

மர்ம மனிதன் என்ற போர்வையில் எமது மக்களின் அமைதியான வாழ்வின் மீது அச்சுறுத்தல் விடுத்து அப்பாவி மக்களை பதற்றம் நிறைந்ததொரு இருண்ட வாழ்விற்குள் மறுபடியும் தள்ளிவிட எத்தனிக்கும் ஈனச்செயல்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதிக விலை கொடுத்தே இந்த அமைதி தரும் சூழலை மக்கள் அடைந்திருப்பினும் அந்த இழப்புக்களின் துயரங்களில் இருந்து மீண்டெழ எத்தனித்து வரும் நிலையில் கௌரவமானதொரு அரசியல் தீர்வு பெற்று எமது மக்கள் வாழும் ஒரு காலச்சூழலை உருவாக்க நாம் தொடர்ந்தும் உழைத்து வரும் இத் தருணத்தில் மறுபடியும் இங்கு எமது மக்களின் இயல்பு வாழ்வை சிதைக்கும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிறிஸ் மனிதன் என்றும் மர்ம மனிதன் என்றும் எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் திட்டமிட்டு சில இடங்களை தெரிவு செய்து அங்கெல்லாம் அச்சம் தரும் சில நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. (15 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமி மரணம் டெங்கு காரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுமி தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த சுரேஸ் அபர்ணா (வயது 6) என்ற சிறுமியே நேற்று மாலை 4.45 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை சித்திவிநாயகர் மகா வித்தியாலய தரம் 1 மாணவியே சாதாரண காய்ச்சல் ஏற்பட்டதையடுதது மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுனதினம் பகல் 1.00 மணியளவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.(எஸ்)

# தூக்குத் தண்டனைக்கு இடைக்காலத் தடை

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்டுள்ள மூவரின் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்ட பேரறிவாளன், முருகன் மற்றும் சாந்தன் ஆகிய மூவரும் தாக்கல் செய்திருந்த மனு இன்று சென்னை உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எட்டு வாரங்களுக்கு மூவருக்கும் இந்த மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு இடைகால்த் தடை உத்தரவு விதித்தது.

அத்துடன் இவர்களின் வழக்கு மீள் பரிசீலனை செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மனுதார்கள் சார்பில் இந்தியாவின் பிரபல சட்டத்தரணி ராம் ஜெத்மலானி ஆஜரானதாக தெரியவருகிறது. தமக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்க நீண்டகாலம் செலவிடப்பட்டுள்ளதாக மனுவில் இம் மூவரும் குறிப்பிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## மேலும் ஒருவர் தீக்குளிப்பு

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலையாளி களின் தூக்குத் தண்டனையை நிறுத்தக் கோரி மீண்டும் ஒருவர் தீக்குளித்துள்ளார்.

தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட 3 பேரின் மனுக்களும் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட் டதை தொடர்ந்து 9 ஆம் திகதி தூக்குத் தண்டனையை நிறைவேற்ற ஏற்பாடு நடந்து வந்தது. இவ் வேளையில் ஈரோடு மாவட்டம் அட்டவணை புதூரை சேர்ந்த பில்லாமணி (வயது 44) தீக்குளித்துள்ளார். இவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூரில் கொலை முயற்சி காயத்துடன் பெண் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் ஆலய சூழலில் இளம் பெண் ஒருவரைக் கத்தியால் குத்தி கொலைசெய்யும் முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரவு நல்லூர் ஆலய திருவிழாவுக்கு வருகைதந்த இந்த இளம்பெண்ணை நீர்கொழும்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தி கொலைசெய்ய முற்பட்டிருக்கிறார். அச்சமயம் அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்தியதுடன் குறித்த இளைஞரையும் கைதுசெய்தனர்.

எனினும் மேற்படி இளம் யுவதி காயங்களுக்குள்ளாகிய நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டார். இப்பெண் தற்போது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த மேற்படி இளைஞரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த இளம் யுவதியும் கடந்த (15 ஆம் பக்கம் பார்க்க)



## ஆட்சிமுறையில் மாற்றம் வேண்டும்

(கொழும்பு)

இந்நாட்டில் பல்லின மக்கள் வாழ்கிறார்கள். எனவே பன்முகத்தன்மை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் இலத்திரனியல் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய ஆட்சி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி மக்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

## மதுபான சாலைகள் இன்று மூடப்படும்

(கொழும்பு)

ரமழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு இன்று அனைத்து மதுபானசாலைகளையும் மூடுவதற்கு கலால்வரித் திணைக் களம் தீர்மானித்துள்ளது. அறிவித்தலை மீறித் திறப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்கள அதிகாரி பிரசாத் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

## முல்லையில் தேர்தல் முடிவு இன்னும் இல்லை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுகுடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளின் தேர்தல்களை ஏனைய தேர்தல்களுடன் ஒரே தடவையில் நடத்துவதா இல்லையா என்பது குறித்து இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இது குறித்த தீர்மானத்தை விரைவில் வெளியிடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் தேர்தல்கள் நடத்தப்பட்ட தருணத்தில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்படாமை மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெறாத காரணத்தினால் குறித்த இரண்டு பிரதேச சபைகளில் தேர்தல்கள் இடம்பெறவில்லை.

ஒத்திவைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளின் தேர்தல்களை நடத்த முடியுமா என்பது குறித்த அறிக்கையை முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் தேர்தல்கள் ஆணையாளர் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் குவியும் ஆபாசப் பிரசுரங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஆபாசப் பத்திரிகைகளின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது எனவும் வடபகுதியில் உள்ள ஏனைய பல பிரதேசங்களில் இப்பத்திரிகைகள் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இதனால் மாணவர்கள் மட்டத்தில் கல்வி பாதிக்கும் நிலைமை தோன்றியிருப்பதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளில் விரைவாக இப்பத்திரிகைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இதனை அங்குள்ள பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், பெரியோர்கள் என ஆவலுடன் விரும்பி வாங்குவதாகவும், பள்ளிச் சிறார்கள் புத்தகங்களுக்கு மத்தியில் வைத்துப் படிப்பதாகவும் அறிய வருகிறது. மேலும் இப்பத்திரிகையை விநியோகிக்கும் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் பத்திரிகை இப்பிரதேசத்தினுள் வந்து மறுநாள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விடுவதாகவும், இப்பிரதேசத்தில் அதற்கு நல்ல கிராக்கி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகைகளின் வரவினால் மேற்படி பிரதேச பாடசாலையில் உள்ள மாணவர்கள் சமூகச் சீர்கேடான வழியை நாடுகின்றனர். இதற்கு ஆதாரமாகக் கிளிநொச்சியில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற 15 சிறுவர் துஷ பிரயோகச் சம்பவம் குறிப்பிடத்தக்கது.

எனவே சமூகப் பெரியோர்கள், பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் பெண்கள் என்போர் இவ்விடயத்தைக் கண்டும் காணாமல் இருப்பது பற்றிப் பொதுமக்கள் கவலை தெரிவித்ததுடன் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் இடம்பெறும் பாரதூரமான சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுகின்றனர்.

(எப்,எஸ்)

## தபால் திணைக்களத்திற்கு ஆயிரம் உத்தியோகத்தர்கள்

ශ්‍රී ලංකා තැපැල්
இலங்கை அஞ்சல்
SRI LANKA POST

தபால் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை செயற்திறன்மிக்கதாக்குவதற்கு ஆயிரம் தபாற்காரர்களை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால் மா அதிபர் ஆர்.டீ.சி காமினி தெரிவித்தார்.

தபாற்காரரர்களின் தட்டுப்பாடு காரணமாகப் பதிவுசெய்யப்பட்ட கடிதங்களை பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைளின்போது பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் தபால் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டின. புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதன் மூலம் இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துக்கொள்ள் முடியும் என தபால்த்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


## ஜனாதிபதிக்கு கௌரவ நாமம்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வோஹாரபதி எனும் கௌரவ நாமம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை சட்டக் கல்லூரியின் 137வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இது தொடர்பான வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சட்டக் கல்லூரியின் நூறாவது குழுவின் மாணவனாக கல்வி கற்று இலங்கையின் பிரஜையொருவர் அடையக் கூடிய உயர்ந்த பதவியான நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை பெற்ற சட்டக் கல்லூரிக்கு பெருமை சேர்த்ததற்காக ஜனாதிபதிக்கு இந்த கௌரவ நாமம் சூட்டப்பட்டுள்ளது. சட்டக்கல்லூரியின் அதிபர் டப்ள்யூ.டி.ரொட்திரிகொவினால் ஜனாதிபதிக்கு கௌரவ நாமம் வழங்கப்பட்டுள்ளது

## அடைக்கல நாயகி ஆலய கொடியேற்ற விழா



ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தின் மரியன்னையின் பிறந்தநாள் திருநாளை முன்னிட்டு கொடியேற்றமானது நேற்று மாலை 5.30 மணியளவில நடைபெற்று திருநாள் நவநாட்கள ஆரம்பமாகியது.

எதிர்வரும் புரட்டாதி 08 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மரியன்னையின் திருநாளை முன்னிட்டு கொடியேற்றத்துடன் ஆரமபமாகிய முதல் நாள் திருப்பலியில் ஆலய கொடியினை ஆனைகோட்டை ஆலய பங்குத்தந்தை அருட்பணி சோதி நாதன் ஏற்றி வைத்து தொடக்கிவைத்தார்.

நேற்று நடைபெற்ற 1 ஆம் நாள வழிபாட்டில் "இறை வார்த்தையை எடுத்துப் படி" என்னும் தொனிப் பொருளில் அமலமரித் தியாகிகள் குருக்களைச் சேர்ந்த அருட்தந்தை ஜோர்ஜ் பெனான்டோ அடிகளார் சிறப்பான மறையுரையுடன் வழிபாட்டினை நடாத்தினார். 9 நாட்கள் நடைபெறும் நவநாள் வழிபாட்டிலும் பல குருக்கள் பங்கு பற்றி ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர்.(அ)

## மகா கும்பாபிஷேகம்


சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்லத்தின் வித்தியா மகா கணபதி ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக் கிழமை காலை 7.35 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை 4 மணி தொடக்கம் கிரியைகளும் தொடர்ந்து எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஜம்புமகேஸ்வர சிவாச்சாரியார் கும்பாபிஷேக கிரியைகளை ஆற்றவுள்ளார்.

அன்றைய தினம் கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னர் இல்ல மாணவர்களின் திருமுறை ஓதுதல் நடைபெற்று பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரையைத் தொடர்ந்து நல்லை ஆதின முதல்வர் அருளுரைகளை வழங்கவுள்ளார்.

## ரமழான் சிந்தனை



நோன்புப் பெருநாள் தொழுகையின் பின்னர் அவரவர் உறவினர்களுடன் ஒன்று இணைந்து உணவை அருந்துதல், முஸாபஹா செய்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தல் சிறப்பானதாகும். வீண் பொழுதுபோக்கு, களியாட்டம், மது அருந்துதல் விலக்கப்பட்டுள்ளன. (105)

## இன்று நோன்புப் பெருநாள்; ஒஸ்மானியாவில் தொழுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 7 மணிக்கு பெருநாள் தொழுகையும் ஜும்மாவும் நடைபெறும்.

வரலாற்றில் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் பொதுவான மைதானத்தில் தொழுகை இடம்பெறுகின்றன.

மீள் குடியேறி இங்கு வசிக்கும் அனைத்து முஸ்லிம் மக்களும் இன்று ஒன்று கூடுகின்றனர். பெருநாள் தொழுகைக்காக ஒன்று கூடுவோருக்கான குளிர்பானம், சிற்றுண்டிகளும் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

யாழிலுள்ள நாலு ஜும்மாப் பள்ளியும் ஏனைய பள்ளிவாசல்களும் இணைந்து மைதானத்தில் தொழுகையை நடாத்த முடிவுசெய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(105)

## பளையில் விபத்து; இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)




கென்டெய்னர் வாகனம் மோதி விபத்திற்குள்ளானதில் இளைஞர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். பளைப் பகுதியில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் வீதியால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் கென்டெய்னர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த சுரேஸ் (வயது - 24) என்ற இளைஞரே கென்டெய்னர் வாகனத்துடன் மோதுண்டார். படுகாயமடைந்த நிலையில் இவர் யாழ். போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொதுப் பட்டமளிப்பு வைபவம்

### பட்டமளிப்பு விழா நிகழ்வுப் புகைப்படம் எடுப்பதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் 06.10.2011 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இவ்வைபவ நிகழ்வில் அண்ணளவாக 1700 புகைப்படங்கள் (4R அளவுள்ள வர்ணப் புகைப்படம்) எடுக்கவேண்டியுள்ளது. எனவே இதற்குரிய விலைக் கூற்றினை 12.09.2011 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தகுதி வாய்ந்த புகைப்படப்பிடிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறாரகள். கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் பட்டமளிப்பு வைபவத்தினைப் புகைப்படம் பிடித்தல் என தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
30.08.2011.

(C/917)

உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறு செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

-விவோகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## குழந்தைகளாக வளர விடுங்கள்!

படிப்பின் அவசியத்தை எல்லோருமே உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் பெற்றோரும் ஆசிரியர்களும் எப்போது பார்த்தாலும் படி, படி என பிள்ளைகளை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். பல பெற்றோர் பள்ளிப் படிப்பையும் தாண்டி, ரியூசன் வகுப்புகள், சங்கீதம், நடனம், ஆங்கிலம், கராட்டி வகுப்பு என பிள்ளைகளை வாட்டியெடுக்கிறார்கள்.

அனைத்துத் துறைகளிலும் தங்கள் பிள்ளை கெட்டிக்காரராகிவிட வேண்டும், அதற்குரிய சகல வாய்ப்புகளையும் அளிக்க வேண்டும் என்பதற்காக இப்படி மினெக்கெடுகிறார்கள். இதனால் பல ஆயிரம் ரூபா இந்தப் படிப்புகளுக்குச் செலவாவதோடு, குழந்தைகள் மன அழுத்தத்துக்கும் ஆளாகிறார்கள் என ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

பிள்ளைகள் படிப்புக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்க பெற்றோர் தயார். கடன் வாங்கியாவது, கிரெடிட் கார்ட்டில் தேய்த்தாவது படிப்புகளுக்கான கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். விடுமுறை நாட்களில் கூட, காலையில் தொடங்கி, மாலை வரை பல்வேறு வகுப்புகளுக்குப் போய்க்கொண்டே இருக்கிறார்கள் குழந்தைகள். காலை ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுவதிலிருந்து இரவு படுக்கப் போகும்வரை பிள்ளைக்கு இருக்கும் வகுப்புகளின் அட்டவணையைச் சொல்லி ஆனந்த அலுப்படைகிறார்கள் பெற்றோர். விளையாட்டு என்பது செல்போனிலுள்ள விளையாட்டுகளோடும், கம்ப்யூட்டர் விளையாட்டுகளோடும் நின்றுவிடுகிறது.

10ஆம் வகுப்பு முடிவதற்குள் குழந்தைகள் என்னவெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என நம் பெற்றோர் நினைத்தார்களோ, அதையெல்லாம் 5ஆம் வகுப்பு முடிவதற்குள் தங்கள் பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டும் என இப்போதைய பெற்றோர் நினைக்கிறார்கள். முதலாம் வகுப்பிலிருந்தே புலமைப்பரிசில் பரீட்சையில் பிள்ளை சித்தி எய்துவதற்கான வியூகங்களை வகுக்கத் தொடங்கிவிடுகிறார்கள். தம் பிள்ளை புலமைப்பரிசிலில் தோற்றுவிடுவதை ஒவ்வொரு பெற்றோருமே மாபெரும் அவமானமாகக் கருதும் நிலைக்குச் சென்றிருக்கிறார்கள்.

நீச்சல் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, ஆன்மீகப் பயிற்சி என்று எத்தனை விதமாகப் பிள்ளைகளிடம் சகலகலாவல்லமையையும் திணித்துவிடப் பெற்றோர் முயல்கிறார்கள்! கையில் பணம் இல்லாத காரணத்தால், ஏதாவது ஒரு வகுப்பை நிறுத்த நேர்ந்தால், மனம் வருத்தப்படுகிறார்கள். தங்களைக் குற்றவாளிகள் போலக் கருதிக் கொள்கிறார்கள். பல தியாகங்களை செய்து, சக்தியை மீறி செலவு செய்து பிள்ளைகளை வளர்க்கிறார்கள்.

இதனால் ஏற்படும் மனச் சோர்வு காரணமாக, குழந்தைகள் சிறு தவறு செய்தாலும் கோபத்தில் கத்துகிறார்கள், கடுமையாகத் தண்டிக்கிறார்கள். இது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. குழந்தைகளுக்கு பாட்டு, நடனம், கராட்டி எல்லாம் அவசியம்தான். ஆனால் இதையெல்லாம் செய்தால்தான் தாங்கள் சிறந்த பெற்றோர் என பிள்ளைகள் நினைப்பார்கள் என நினைப்பதும் இதுபோன்ற திறமைகள் குழந்தைகளுக்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கித் தரும் என நினைப்பதும் தவறு.

அதேபோல், என்னால் இதெல்லாம் படிக்கவைக்க முடியாது என குழந்தைகளிடம் சொல்வது கஷ்டமான விஷயம்தான். ஆனால், தேவைப்பட்டால் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள். பிள்ளைகளிடம் திறந்த மனதோடு பழகுவதும், தங்கள் தேவைகளையும் விருப்பத்தையும் வெளிப்படையாகச் சொல்லக்கூடிய நம்பிக்கையை அவர்களுக்குத் தருவதும் முக்கியம். விருப்பத்திற்குரிய துறைகளை அவர்களே தேர்ந்தெடுக்க விடுவதும், நம்மால் முடியாமல் போன ஆசைகளை எல்லாம் அவர்கள் மூலம் அடைந்துவிட முயலாமல் இருப்பதும் நல்லது.

குறிப்பாக, பிற்கால எதிர்பார்ப்புகளை உத்தேசித்து, இப்போது குழந்தையாக அவர்கள் வாழும் தன்மையையும், அந்தப் பருவ விளையாட்டுகளையும் சிதைத்து விட வேண்டாம்.

– ஆசிரியர்.

# யாழில் பெற்றோரை இழந்த நிலையில் 417 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்

## -யாழ் மாவட்ட புள்ளி விபரத்தகவல்-

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வருட தைமாதம் முதல் ஆனி மாதம் வரையான அரையாண்டு காலப் பகுதியில் பெற்றோரை இழந்துள்ள நிலையில் 417 சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டசெயலக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி 15 பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள பெற்றோரை இழந்த சிறுவர்கள் எண்ணிக்கை தொடர்பான விபரம் வருமாறு.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 15 சிறுவர்களும் வேலனை பிரதேச செயலக பிரிவில் 25 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரிவில் 16 சிறுவர்களும், காரைநகர் பிரிவில் 44 சிறுவர்களும், யாழ்ப்பாணத்தில் 87 சிறுவர்களும், நல்லூரில், 10 சிறுவர்களும், சண்டிலிப்பாயில் 37 சிறுவர்களும் சங்கானையில் 22 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 12 சிறுவர்களும், தெல்லிப்பளைப் பிரிவில் 11 சிறுவர்களும், கோப்பாய் பிரிவில் 42 சிறுவர்களும், சாவகச்சேரிப் பிரிவில் 24 சிறுவர்களும்,கரவெட்டிப் பிரிவில் 32 சிறுவர்களும், பருத்தித்துறை பிரிவில் 21 சிறுவர்களும், மருதங்கேணிப் பிரிவில் 19 சிறுவர்களும் பெற்றோரை இழந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

# நிரந்தர கட்டடம் இன்றி இயங்கும் காரைநகர் பிரதேச சபை

(யாழ்.நிருபர்)

காரைநகர் பிரதேச சபைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாமையால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பிரதேச சபைக் கட்டடம் அமைப்பதற்கு வலந்தலையில் 6 பரப்பு காணிகொள்வனவு செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் கட்டடவேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

மேற்படி பிரதேசசபை 2006 ஆம் ஆண்டு முதல் காரைநகர் மேற்கு வீதியில் உள்ள வடக்கு உப அலுவலகத்தில் இயங்கி வருகின்றது.

தற்போது அக்கடடத்தில் போதிய வசதிகள் இன்மையால் காரைநகர் கிழக்கு வீதியில் உள்ள கிழக்கு உப அலுவலகத்திற்கு இடம்மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு உப அலுவலகம் அமைந்துள்ள சுற்றாடல் மாரி காலத்தில் வெள்ளத்தால் நிறைந்துவிடும். இவ் அலுவலக முன்பக்கமும் பிரதான வீதியும் வெள்ளம் நிரம்புவதால் இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் மாரிகாலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# கிறிஸ் பூதத்தை காரணம் காட்டி நாடுமுழுவதும் படைமுகாம்கள் அமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை அகற்றிவிட்டு கிறீஸ் பூதத்தைக் காட்டி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் படை முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் அவசர சட்டத்தால் நாட்டு மக்கள் இன்னல்களை அனுபவிக்க வேண்டிவருமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குருநாகல் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்:-

"எந்தப் பிரச்சினையும் இல்லை அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக இன்று கூறுகின்றனர். யாருடைய அழுத்தம் இது? நேரடியாக பான் கீ மூனின் அறிக்கைதான் காரணம். தருஸமனின் அறிக்கையின்படியே அவசரகாலச் சட்டத்தை அகற்றியுள்ளனர்.

இவர்கள் இங்கு தேசப்பிரியர்கள் போன்று கதைக்கின்றனர். ஆனால் அவசரகாலச் சட்டத்தை அகற்ற நாம் தயார் சிறிய காலம் ஒன்றைத் தாருங்கள் கிறீஸ் பூதத்தைப் போட்டு இதனை அகற்றுகிறோம் என்று பான் கீ மூன் மற்றும் தருஸமனிடம் சென்று மண்டியிட்டு கூறுகின்றனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் அவசர சட்டம் உள்ளது. அந்த அவசர சட்டம் எமது நாட்டு மக்களுக்கு எதிராகச் செயற்படும்.

இன்று அவசரகாலச் சட்டத்தை நீக்கும்வேளை நாட்டில் அனைத்து பகுதிகளிலும் இராணுவ முகாம்களை அமைக்கின்றனர். எல்லா இடங்களிலும் கடற்படை முகாம்களை அமைக்கின்றனர். எல்லா இடங்களிலும் விமானப்படை பொலிஸ் சோதனைச்சாவடி அமைக்கின்றனர்.

மாவட்டத்திற்கு மாவட்டம் அவசரகாலச் சட்டத்தை நீக்கி அரசாங்கத்தின் அவசர சட்டத்தை போட்டுள்ளனர். அது எப்படி? இலங்கை முழுவதையும் இராணுவமயப்படுத்த முயற்சிக்கின்றனர். அதனால்தான் சொல்கிறேன் தயவு செய்து இரு கண்களையும் திறந்து பாருங்கள்.

சகோதரர்களே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாட்டு மக்கள் ஒரே நேரத்தில் எழுந்தால் ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஓட வேண்டிவரும். எனத்தெரிவித்தார்.

# விநாயகர் சதுர்த்தி

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் நர்ளை வியாழக்கிழமை விநாயகர் சதுர்த்தி நடைபெறும்.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப் பூஜையைத் தொடர்ந்து விநாயகர் சுவாமி வீதியுலா எழுந்தருள்வார்.

மதியம் 12.00 மணிக்கு அடியார்களுக்கான மகேஸ்வர பூஜை இடம்பெறும். (68)

# உயர்தரப் பரீட்சையில் நெருக்கடிகள் இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பல நெருக்கடிகள் தோன்றியிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

அந்தச் சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

ஜப்பான் மொழிப் பரீட்சை மற்றும் நாட்டியமும்,நாடகமும் போன்ற துறைகளுக்கான வினாத்தாள்களில் பல பிரச்சினைகள் தோன்றியி ருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைகள் இடம்பெறும் தருணத்தில் ஏற்படும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

அவரின் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரதிக் கல்வியமைச்சர் விஜித் விஜித்தமுனி சொய்சா தெரிவிக்கையில்,

பரீட்சைகளை சிறந்த முறையில் நடத்துவது பரீட்சைகள் திணைக் களத்தின் பொறுப்பு எனினும், தற்செயலாக சில நெருக்கடிகள் ஏற்படலாம் எனவே, இவ்வாறான நெருக்கடி களுக்கு துரிதமாக தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பரீட்சைகள் ஆணையாளர் இது குறித்து தெரிவிக்கையில் உயர்தரப்பரீட்சையின் போது மாணவர் எதிர்கொண்ட நெருக்கடிகள் குறித்து விசாரணைகள் இடம்பெறவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

# சங்கீத, நடனக் குழுமத்துக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

(யாழ். நிருபர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தினால் சங்கீத நடன குழுமம் ஒன்று அமைக்கப்படவுளளது.

இக்குழுமத்தில் இணைந்து கொள்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்த 17-29 வயதுக்குட்பட்ட சங்கீத நடனத்துறைகளில் விசேட திறமைகளைக் கொண்டவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் உதவி இயக்குநர்,தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்,மாவட்ட அலுவலகம்,கண்டி வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு உதவி இயக்குநர் த.ஈஸ்வரராசா தெரிவித்துள்ளார். (10)

# சினிமாவிலிருந்து இளம் சந்ததியினரை மீட்பதற்கு ஆன்மீக நூல்களை வாசிக்கப் பழக்கவேண்டும்

## முன்னாள் துணைவேந்தர் சண்முகலிங்கன்



(யாழ். நிருபர்)

இலத்திரனியல் ஊடகங்களில் மூழ்கிப்போய் தவறான வழியில் செல்லும் இளைய தலைமுறையினரை மீட்டெடுப்பதற்கு அவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் பெற்றோரும், ஆசிரியர்களும் அக்கறை செலுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார்.

சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் எழுதிய "சைவசமய தரிசனம்" நூல் அறிமுக விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் நாவலர் மண்டபத்தில் இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் பா. உதயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

தொலைக்காட்சி, தொடர் நாடகங்களிலும், சினிமாவிலும் அதிகளவு நேரத்தைச் செலவிடும் இளைய தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது.

கைத்தொலைபேசியில் சகலதையும் பார்த்து தவறான திசையில் செல்ல முற்படும் இளம் சந்ததியினரை மீட்டெடுப்பதற்கு நல்ல அறிவு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றை வாசிக்கும் பழக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் நல்லறிவு புகட்டும் நூல்களைப் பிள்ளைகள் வாசிக்க வாங்கிக் கொடுக்க வேண்டும்.

சைவசமய விரதங்கள், பண்டிகைகள் பற்றியோ, சைவநாயன்மார்கள் பற்றிய வரலாறோ, சைவ ஆலயக் கிரியைகள், வழிபாட்டு முறைகள் பற்றியோ எதுவும் அறியாதவர்களாக அறிவதற்கு ஆர்வமோ, அக்கறையோ இல்லாதவர்களாக இளந்தலைமுறையினர் பலர் காணப்படுகின்றனர்.

அத்தகையவர்களுக்கு சைவசமய தரிசனம் போன்ற நூல்களை வாசித்து எமது சமய உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்றார்.

கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரட்ணம் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன், ஆசிரியர் ந. கணேசமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூல் அறிமுகவுரையை ஆசிரியர் பாலசண்முகன் நிகழ்த்தினார். (10)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு கந்தவர்வளவு ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மூன்றாம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தின் எதிர்வரும் 10ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 11ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் காலை 11.00 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.

## கும்பாபிஷேகம்

(குருநகர்)

ஊரெழு வடக்கு, சக்திபுரம் வேல்முருகன் திருக்கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேகக் கிரிகைகளில் சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள் மற்றும் சிவஸ்ரீ கி. கேதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கும்பாபிஷேகம் தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும். மண்டாலாபிஷேகம் செப்ரெம்பர் 14ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

## வீதி அகலிப்புக்காக மதகுகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அண்மையில் உள்ள மதகுகள் புனரமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. இந்த வீதியில் மதகு புனரமைக்கப்பட்ட பகுதியில் உள்ள வீதிகளின் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதி அகலிப்புக்கென பெருமளவிலான கற்கள் என்பன பறிக்கப்பட்டுள்ளன.

அதனைவிட கோப்பாய்ச் சந்திக்கு அண்மையில் வீதியோரங்களில் இருக்கும் மதில் சுவர்கள் மற்றும் கட்டடங்கள் என்பன அகற்றப்பட்டும் வருகின்றன. (வி)

## பொருட்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு குடும்பநல சுகாதார உத்தியோகத்தரால் வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் ஒருவருக்கு அரைக்கிலோ சீனி, 175 மில்லி லீற்றர் மரக்கறி எண்ணெய் மற்றும் மூன்று பைக்கற் சோளன் மா வீதம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

வத்திராயன் மருதங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு இளம்பிறை முன்பள்ளியிலும், உடுத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு, பாரதி முன்பள்ளியிலும் வைத்து வழங்கப்பட்டது. (38)





நகுலேஸ்வரம், கூவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நலிவுற்ற ஒரு தொகுதி மாணவர்களுக்கு யாழ். எயிற் நிறுவனத்தால் கற்றலுக்கான உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அவுஸ்ரேலியா மெல்பேர்ன் நகரில் இருந்து வருகை தந்த நித்திய ஒளி அற நிறுவன அமைப்பின் பொருளாளர் செல்லையா புஸ்பராசா மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும், உதவிப் பொருட்களை பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் காணலாம்.

## மருத்துவமனைக்கு சுற்று மதில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவிப் பிரதேச மருத்துவமனைக்கான சுற்றுமதில் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கடந்த கால போர்க் காலத்தில் சேதமடைந்த இம் மருத்துவமனையின் சூழலைப் பேணும் வகையில் சுற்று மதில்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

குறித்த மருத்துவமனையின் அபிவிருத்திப் பிரிவினால் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (121)

## கல்விச் சுற்றுலா

(அம்பலப்பெருமாள்)

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள மாணவி ஒருவர் இநதியாவுக்கான கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதில் பாலிநகர் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. (உயர் தரம்) கல்வி பயிலும் குலவீரசிங்கம் பிருந்தா என்ற மாணவியே கல்வி மற்றும் விளையாட்டுத்துறைகளில் சாதனை படைத்தமைக்காகவே அவர் இக்கல்விச் சுற்றுலாவிற்குச் செல்லவுள்ளதாகப்பாடசாலை சமூகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.(121)

## டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரம்

(ஒட்டுசுட்டான்)

டெங்கு நோய் பரவும் அபாயம் தீவிரமடைந்துள்ளதன் காரணத்தால் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு ஆகிய பகுதிகளில் சுகாதார தொண்டர்களினால் நேற்று முன்தினம் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பிரசார நடவடிக்கைகளின்போது சுகாதார தொண்டர்கள் வீடுகள், கடைகள் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய பழைய ரயர்கள், தகரப் பேணிகள், போத்தல்கள், சிறுகுட்டைகள் என்பவற்றினை சோதனை செய்து நீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் எவ்வாறு பெருகின்றன. நுளம்பின் வாழ்க்கை வட்டம் குறித்தும் விளக்கப் படங்களுடன் விளக்கமளித்தனர்.

மேலும் நுளம்புகள் பெருகுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும் போதுதான் நுளம்புகள் பெருகி பாரிய டெங்கு நோயினை ஏற்படுத்துகின்றன.

பொதுமக்கள் நீர்தேங்கி நிற்கக்கூடிய பொருட்களை அழித்து, இடங்களை துப்புரவு செய்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதனை பின்பற்றுவதன் மூலம் ஆபத்தான டெங்கு நோயிலிருந்து பொதுமக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் தொண்டர்கள் விழிப்புணர்வாகக் குறிப்பிட்ட விடயங்களை மக்களுக்கு வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (101)

## கட்டடப் புனரமைப்பு பணிகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு வெங்காய உற்பத்திச் சங்கத்தின் கட்டடம் புனரமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் இந்தக் கட்டடத்திற்கான புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெற்றன.

கடந்த கால யுத்தத்தினால் கடுமையாகச் சேதப்பட்டு தரைமட்டம் ஆக்கப்பட்ட இக்கட்டடம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. இந்தக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (வி)

## பொதுநோக்கு மண்டபத்தை விரைவில் திறக்க ஏற்பாடு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளத்தின் பொதுநோக்கு மண்டபம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. கடந்த கால போர்க் காலத்தின்போது சேதமடைந்த நிலையில் உள்ள இம்மண்டபம் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது. இப்பொது நோக்கு மண்டபத் திறப்பு விழாவிற்கான முன்னேற் பாடாக இக்கிராம மக்களினால் நேற்று முன்தினம் காலை தொடக் கம் பிற்பகல் வரை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இம்மண்டபம் திறந்து வைக்கப்படவிருப்பதாக இப்பிரதேச மக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

## தெளிகருவிகள் வழங்கல்

(சாவகச்சேரி)

மீள்கட்டமைப்பு அமைச்சினால் தென்மராட்சியிலுள்ள மறவன்புலோ விவசாய சம்மேளனத்திற்கு 30 தெளிகருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இத்தெளி கருவிகள் விரைவில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (75)

# சந்தேகத்துக்கிடமாக நடமாடுபவர்கள் குறித்து பொலிஸாருக்கு உடன் அறிவிக்கவேண்டும்

## வவுனியா பொதுமக்கள் தொடர்பு பொறுப்பதிகாரி வேண்டுகோள்

(வவுனியா)

"கிராமங்களுக்குள் சந்தேகத்திற்குரியவர்கள் நடமாடும்போது அவர்கள் யாரென விசாரிக்கும் உரிமை மக்களுக்கு உள்ளது. அதேநேரத்தில் பொலிஸாருக்கு இவ்விடயத்தை உடன் அறிவிக்கும் கடமையும் உங்களுக்கு உள்ளது, என வவுனியா பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுப் பொறுப்பதிகாரி மஹிந்த ஜெயசேனா தெரிவித்தார்.

இறம்பைக்குளம் கிராம சேவையாளரின் ஏற்பாட்டில் அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற பொது மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரவில் மக்கள் பீதி கொண்டுள்ளதினை நாங்கள் அறிகின்றோம். மக்களுக்கு தைரியம் ஊட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம்.

இரவு நேரத்தில் அசம்பாவிதங்கள் பற்றித் தெரிந்தால் எம்மை தொலைபேசி மூலம் அழையுங்கள். சில நிமிடநேரத்தில் எங்களுடைய அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு வருவார்கள்.

களவு, கொள்ளையிடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களும் மக்களை பீதி கொள்ள வைக்கும் வகையில் பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர் எனத் தகவல்கள் வந்துள்ளன

பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவரும் பிற்பகல் 6 மணிக்குப் பின்னர் சிவில் உடையில் நடமாடுவது தடைசெய்யப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தேவைப்படும் கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்களையும், விழிப்புக்குழுக்களையும் பிரதேச கிராமசேவையாளரின் அனுமதியுடன் ஏற்படுத்தி வருகின்றோம்.

ஒரு கிராமத்தின் பாதுகாப்பு என்பது அந்தப் பிரதேச மக்களுடைய பொறுப்பு. பெரியகோமரசன் குளத்திலும், சூடுவெந்த புலவிலும் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களில் தொடர்பு பட்டதான இரு பொலிஸ் கொன்ஸ்டபிள்களும், இரு ஊர்காவல் படை வீரர்களும் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது என்றார். (39)

# மாற்று வலுவுடையோர் பயனடைய பற்றரியில் இயங்கும் முச்சக்கர வண்டி

## யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் மாற்றுவலுவுடையோர் பயன்படுத்தக்கூடிய வகையில் பற்றறி மூலம் இயங்கும் முச்சக்கரவண்டி ஒன்று புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாற்று வலுவுடையோர் வீதியில் பயணிக்கக் கூடியவகையில் உருவாக்கப்பட்டுள்ள இம்முச்சக்கரவண்டி மீள் மின்னேற்ற பற்றறி மூலம் போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் 70 கிலோ மீற்றர் தூரம் ஓட்டக்கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ளது.



75 ஆயிரம் ரூபா பெறுமதியான இம் முச்சக்கர வண்டியை மாற்றுவலுவுடையோர் சிரமமின்றி பயன்படுத்த முடியும். வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை மாற்று வலுவுடையோர் பயன்படுத்துவதிலும் பார்க்க எம்மால் தயாரிக்கப்படும் இம்முச்சக்கர வண்டியைப் பயன்படுத்தி உள்ளூர் தயாரிப்புக்கு ஊக்கமளிக்குமாறு ஜெய்ப்பூர் நிறுவனம் மாற்றுவலுவுடையோரை கேட்டுக்கொண்டுள்ளது. (எஸ்)

# கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். எயிட் நிறுவனம் நகுலேஸ்வரம் கூவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நலிவுற்ற ஒரு தொகுதி மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்களை வழங்கியுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி நிறுவன தலைமைக் காரியாலயத்தில் நகுலேஸ்வர பிரதேச சமூக சேவையாளர் என்.ரி.மேல்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவுஸ்ரேலியா மெல்பேர்ன் நகரில் இருந்து வருகை தந்த நித்திய ஒளி அற நிறுவன அமைப்பின் பொருளாளர் செ.புஸ்பராசா கலந்துகொண்டு மாணவர்களுக்கான உதவிப்பொருட்களை வழங்கி வைத்தார்.

# மாற்று வலுவுள்ளோருக்கான தையல் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனமும், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையும் இணைந்து மாற்று வலுவுடைய மகளிர்களுக்கான தையற் பயிற்சி நெறி எதிர்வரும் 7 ஆம் திகதி ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாற்று வலுவுடைய மகளிருக்கான 6 மாதகால பயிற்சி நெறியில் 20 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். வார நாட்களில் 7 மணித்தியாலங்கள் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது. எனவே இப்பயிற்சி நெறியினைப் பயில விரும்பும் மாற்று வலுவுடைய மகளிர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதன் மூலமும் அல்லது சுண்டுக்குளி வீதியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டும் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள முடியும் என ஜெய்ப்பூர் நிறுவனத் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எஸ்)

# சேவைநலன் பாராட்டுவிழா

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலய அதிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் துணுக்காய் வலயத்தில் 40 ஆண்டுகாலம் கல்விப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற குறித்த வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.ராஜேஸ்வரனுக்கான சேவைநலன் பாராட்டுவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழா மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதுடன் இதில் குறித்த வலயப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வலய உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டுரையை வழங்கவுள்ளனர். (121)

# சிறுவர் பூங்கா திறப்பு விழா

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட சிறுவர் விளையாட்டுப் பூங்கா இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன், இராணுவ அதிகாரிகள், அயற் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (121)

# முன்னோடிப் பரீட்சை

(அம்பலப்பெருமாள்)

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட 10 பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த (சாதாரணதரம்) மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 3 ஆம் தவணை ஆரம்பத்தில் நடைபெறவுள்ளதாக வலயப் பணிமனையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சைகள் 2 பரீட்சை நிலையங்கள் ஊடாக நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(31.08.2011 - புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
ஆவணி 14 ஆம் நாள்.
இராகுகாலம் 12.05-1.35, சுபநேரம் 4.35 -6.05,
நட்சத்திரம்: உத்தரம் மு.ப 10.18 வரை
திதி: திருதியை பி.இ 2.32 வரை
ஸாமவேத உபாகருமம்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:- பண வரவு, வெளிநாட்டு உதவி, காரிய சித்தி, உறவினர் வருகை, மன மகிழ்ச்சி.

ரிஷபம:- பெரியோர் ஆசி, பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, தொழில விருத்தி, நினைத்ததைச் சாதித்தல்

மிதுனம் :- பணவரவு, எதிரியை வெல்லுதல், சகோதரபாசம், பிணக் குத்தீர்த்தல், தேக ஆரோக்கியம்

கடகம்:- தொழில் கஷ்டம், பணக் கஷ்டம், வீண் அலைச்சல், குடும்பத்தில் கவலை, சுற்றத்தார் ஆதரவு.

சிம்மம்:- பண வரவு, நினைத்ததைச் சாதித்தல், தேக ஆரோக்கியம், தொழில் ஆதாயம், பிணக்குத்தீர்த்தல்.

கன்னி :- வீண் அலைச்சல், பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, சகோதரா உதவி, தொழில் மந்தம்

துலாம்:- பண வரவு, வெளிநாட்டு உதவி, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை.

விருச்சிகம்:- தொழில் மந்தம், பணக்கஷ்டம், சுற்றத்தார் தொல்லை, குடும்பத்தில் குழப்பம், விபத்துவரும்.

தனுசு:- பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சகோதரபாசம், தொழில் விருத்தி, கடன் வசூல்.

மகரம:- வெளிநாட்டு உதவி, பணக் கஷ்டம், தொழில் விருத்தி, நண்பர்கள் ஆதரவு, வீணாக ஆத்திரப்படல்.

கும்பம் :- பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம், விபத்து வரக் கூடும்.

மீனம் :- குடும்பத்தில் கவலை, பணக்கஷ்டம், வீண் அலைச்சல், வசதிக்குறைவு, உடல் உபாதை.




எங்கட பெட்டை ஒண்டின்ர கலியாணம் ஒழுங்காப் போனப்பிறகு தான் எனக்கும் இந்த விசயத்தில பொறி தட்டிச்சு!

என்னெண்டு கேக்கிறியள்! உதுதான் முள்முருக்கமரத்தைப் பற்றித்தான் சொல்லுறன்.

இப்பெல்லாம் பெட்டை, பெடியள் கூட்டிக்கொண்டோடுறதால இந்த அடுக்கெல்லாம் பாக்காமல் போனதால இந்தத் தட்டுப்பாட்டைத் தெரியேல்ல.

ஒருகாலம் வேலிக்கு வேலி இந்த முள்முருக்கு சிலித்துப்போய் வளந்து நிக்கும்.

அதில வெட்டிப்போட்ட தடியள் காய்ஞ்சு கொட்டுகின்ற முள்ளுகள் கால்களைத் தைக்கும். கால்களை மட்டுமா தைக்கும்? சைக்கிள் ரயரைக் குத்தி ரியூப்பையும் பதம் பாத்து, எத்தின தடவை சைக்கிள உருட்டிக்கொண்டு சைக்கிள் கடை வழிய திரிஞ்சிருப்பம்.

இப்ப அந்தக் கரைச்சலெல்லாம் குறைஞ்சுபோச்சு. ஏனெண்டா மருந்துக்கும் முள்முருக்கு மரத்தைக் காணேலாம எல்லாம் அழிஞ்சுபோச்சு.

பெட்டையின்ர பொன்னுருக்கலுக்கு கன்னிக்கால் நடுறதுக்கு முள்முருக்கம் தடியைத் தேடி இந்தக் குடாநாடு பூராவும் திரிஞ்சு ஒரு இடத்தில ஆசை அருமையாக் கிடைச்சுது.

அதுவும் சும்மாவே ஒரு தடி 600 ரூபாவாம். சும்மாதான் அந்த நாளேல நாங்கள் எங்களிட்ட இல்லாட்டியும் அயல் வீட்டில வெட்டி எடுக்கிறது.

இந்த முள்முருக்கம் தடியை ஏன் கன்னிக்காலா நடுறதெண்டு சாடைமாடையா எனக்குத் தெரிஞ்சிருந்தது.

எண்டாலும் அதை வடிவாத் தெரியிறது நல்லதுதான எண்டு எங்கட ஊருக்க நாடகம் போடுற அவருக்குப் பீதாம்பரம்தான் சொந்தப் பேர். அதைச் சொன்னா ஒருதருக்கும் தெரியாது.


வண்ணைக் குணமண்ணை எண்டு சொன்னாத்தான் தெரியும். அவருக்குப் புராண இதிகாசக் கதையளெல்லாம் தெரிஞ்சிருக்கும் தான. அவர் சொன்னார் இந்திரன் கெளதவமுனிவரின் இல்லக் கிழத்தியான அகலிகையில் ஆசைகொண்டு அவரை சேவல் கூவுறது போலக் கூவி விடிஞ்சிட்டுதெண்டு முனிவர வெளியில போகப் பண்ணி...

ஆச்சிரமத்துக்குள்ள நுழைஞ்சு அகலிகையை ஏமாத்தின சம்பவத்தில ஆத்திரம் அடைஞ்சு, அகலிகையை கல்லாச் சமையவும், இந்திரனின் மேனிமுழுக்கக் கண்களாகவும் சாபமிட்டார்.

அதன்படி பெண்களின் கற்பைக் காக்க ஆயிரம் முள்ளால் சூழ்ந்த முள்முருக்கையைக் கன்னிக்காலாக நாட்டி திருமணச் சடங்குகளைச் செய்து வைக்கும் பாரம்பரியம் தோன்றினதெண்டும், கல்லாய் சமைந்த அகலிகை ராமனின் கால்கள் பட்டு சாபவிமோசனம் அடைஞ்சதெண்டும் வண்ணைக் குணமண்ணை சொல்லி முடிச்சார்.

எங்கட காலத்தில இந்த முள்முருக்கை அழிஞ்ச மாதிரி முன்னம் முன்னம் என்னெல்லாம் அழிஞ்சுதுலைஞ்சுதோ ஆர்கண்டது.

# முக்கோணத் தொடரின் இறுதிப் போட்டி பலப்பரீட்சையில் சென்றல், ஜொலிஸ்ரார்







(யாழ்ப்பாணம்)

முக்கோணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். சென்றல் அணியும், ஜொலிஸ்ரார் அணியும் இன்று பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளன.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தினால் முதலாவது ஆண்டாக தெரிவு செய்யப்பட்ட மூன்று அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளாக உள்ளமையால் இப்போட்டி மிகுந்த விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தொடரின் மூன்றாவது அணியாக யாழ். பல்கலைக்கழக அணி பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வர்த்தக வங்கி வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பி.ஜீவன் கலந்து கொள்ளவுள்ளார்.

இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு கிண்ணத்துடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என்றும், ஆட்ட நாயகன் விருது மற்றும் தொடர் நாயகன் விருதும் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அத்துடன் இப்போட்டி நிகழ்வில் சகல ரசிகர்களையும் கலந்து கொண்டு உற்சகமளிக்குமாறும் கேட்டுள்ளனர்.

## முக்கோணத் தொடரில் நிகழ்ந்த சாதனைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தால் முதல் முறையாக யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட முக்கோணத் தொடரின் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டது.

இதில் முக்கியமான சில சாதனைகள் வருமாறு:

- தொடரின் முதல் வெற்றியை யாழ். பல்கலைக்கழகம் அணி பதிவாக்கியது.
- பல்கலைக்கழக அணி 4.4 ஓவர்களில் 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
- 4 அரைச் சதங்கள் (சுஜீவன், கலிஸ்ரன், றஜீவ்குமார், கார்த்திக்) பதிவாக்கியுள்ளனர்.
- முதல் மூன்று போட்டிகளிலும் சிறந்த வீரர்கள் (ஜனார்த்தன், கார்த்திக், றஜீவ்குமார்) தெரிவு செய்யப்பட்டனர்.
- 100 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக இரண்டு ஜோடி பெற்றுக்கொண்டது.
- நான்காவது விக்கெட்டுக்காக றஜீவ்குமார், கலிஸ்ரன் (126 ஓட்டங்கள்)
- முதலாவது விக்கெட்டுக்காக றஜீவ்குமார், கபில்தேவ் (100 ஓட்டங்கள்)

## விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் பயிற்சி முகாம்

(கிளிநொச்சி)

துணுக்காய் வலயப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் ஒன்று கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.

மல்லாவி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த பயிற்சியாளர்களும், துணுக்காய் வலய பயிற்சியாளர்களும் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினர். (121)

## அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம் காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் தென்மராட்சிப் பிரதேச மற்றும் யாழ். மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடர் நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

மாவட்டப் போட்டியில் நேற்று முன்தினம் அச்சுவேலி விக்னேஸ்வரா அணிக்கும் நீர்வேலி அணிக்கும் இடையில் நடைபெறவிருந்த போட்டி, நீர்வேலி ஐக்கிய அணி சமூகமளிக்காததால் அச்சுவேலி விக்னேஸ்வரா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் காலிறுதிப் போட்டிக்கு விக்னேஸ்வரா அணி தகுதி பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச மட்டப் பிரிவில் கைதடி மின்னொளி அணிக்கும், கைதடி பாரதி அணிக்கும் நடைபெறவிருந்த போட்டி இரு அணிகளுமே கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டித் திகதி மாற்றப்பட்டு வேறு ஒரு நாள் வழங்கப்பட்டுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இத்தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றது எனவும், இதில் தென்மராட்சிப் பிரதேச மட்டப் போட்டியில், மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி வளர்மதி 'பி' அணியும், யாழ். மாவட்ட மட்டப் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் 'ஏ' அணியை எதிர்த்து நாயன்மார்க்கட்டு பாரதி அணியும் மோதவுள்ளன என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் சம்பியனாகும் அணிகளுக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழுடன் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படும் என்றும், போட்டித் தொடர் நாயகன் விருதும் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)

## தேசிய விளையாட்டு எட்டில் ஆரம்பம்

(கொழும்பு)

37ஆவது தேசிய விளையாட்டு விழா வரும் 8ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் வெற்றியீட்டிய ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த 2500 வீர, வீராங்கனைகள் 18 பிரிவு மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் எதிர்வரும் 8ஆம் திகதி வெகுவிமரிசையாக இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.


தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவான வீர, வீராங்கனைகள் விளையாட்டு விழாவில் இருந்து விலகிக் கொள்ளும் இடத்தில் உரிய ஆவணங்களைச் செலுத்திய பின்னரே விலகிக் கொள்ள முடியும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கண்டிப்புடன் தெரிவித்துள்ளனர்.

## துரையப்பா மைதானத்தில் மெய்வல்லுநர் போட்டி இன்று

(மட்டுவில்)


இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்படும் யாழ். மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி இன்று யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பிரதேச ரீதியில் பதிவு செய்யப்பட்ட கழக வீர, வீராங்கனைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டியோருக்கிடையில் மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். இதில் பிரதேச மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகளை இன்று நடைபெறும் மாவட்ட மட்டப் போட்டி களில் தவறாது கலந்து கொள்ளுமாறும், இப்போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர்.



புதுடில்லியில் நடந்த விழாவில் அர்ஜூனா விருதை இந்திய பட்மின்ரன் வீராங்கனை ஜூவாலா கட்டாவிற்கு ஜனாதிபதி பிரிபா பட்டேல் வழங்குவதைக் காணலாம்.

## விலகினார்




(லண்டன்)

காயம் முழுமையாகக் குணமடையாததால் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரிலிருந்து கௌதம் கம்பீர் விலகியுள்ளார். அவர் விரைவில் நாடு திரும்புகிறார்.

அவர் விளையாடாதது ஒரு நாள் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே சகீர்கான், யுவராஜ்சிங், ஹர்பஜன்சிங், சேவாக் ஆகியோர் இங்கிலாந்துத் தொடரில் இருந்து காயம் காரணமாக பாதியிலேயே விலகிவிட்டனர். இப்போது கம்பீரும் தொடரில் இருந்து விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடர் ஆர்.பி.சிங்கின் இணைப்பு ஆச்சரியம்!




(லாகூர்)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணியில் ஆர்.பி. சிங்கை சேர்த்தது ஆச்சரியம் அளிக்கிறது. இங்கிலாந்திற்கு எதிராக ஓவலில் நடந்த நான்காவது டெஸ்ட் போட்டியில் அவரது பந்துவீச்சு எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அப்படி இருக்கும் போது அவரால் ஒருநாள் தொடரில் ஏதாவது அதிசயம் நிகழ்த்த முடியுமா? அவரை ஒருநாள் தொடரில் சேர்த்தது தவறான முடிவு என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ஆர்.பி. சிங்கை அணியில் இணைத்துக் கொள்ளும் இடத்தில் பல குழப்பத்தை ஏற்படுத்தும். ஜாம் ஷெட்பூரை சேர்ந்த இளம் வீரர் வருண் ஆரோனை அணியில் சேர்த்தது நல்ல முடிவு. புதுமுக வீரரான அவர் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் சாதிக்க கூடியவர். இப்போது உள்ள கால கட்டத்தில் இரண்டிலும் முத்திரை பதிக்க கூடியவர்களே அணிக்கு தேவை.

எனவே, ஆர்.பி.சிங் ஒரு நாள் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டதன் மூலம் இந்தியாவின் பந்து வீச்சுப் பலவீனம் எந்தளவிற்கு உள்ளது என்பதைக் காட்டுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெளியேறினார்




(டெகு)

உலக தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி ஒஸ்கர் பிஸ்டோரியஸ் (காலில் மூட்டுக்கு கீழ் பிளேட் பொருத்தியவர்) அரையிறுதி தகுதிச் சுற்றில் தனது பிரிவில் கடைசி இடம் பிடித்து (46.19 வினாடி) இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் வெளியேறினார்.

தொடரிலிருந்து வெளியேறியது கவலை தரவில்லை. இத்தொடரில் நானும் ஒருவராகப் பங்கு பற்றியதையே பெருமையாக நினைக்கின்றேன். இது புது அனுபவமாக இருந்தது. எனக்கு உற்சாகமளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் என்று ஒஸ்கர் பிஸ்டோரியஸ் தெரிவித்தார்.

## சக வீரரை இடித்துத் தள்ளிய கியூப வீரரின் தங்கம் பறிப்பு



(டெகு)


உலக தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற கியூப வீரர் டாய்ரோன் ரோப்லஸ், மற்றொரு வீரரை இடித்துக் தள்ளியதை தொடர்ந்து அவரது பதக்கம் பறிக்கப்பட்டது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தில் கியூப வீரர் டாய்ரோன் ரோப்லஸ் (13.14 வினாடி) முதலிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கம் வென்றார். போட்டியின் கடைசிக் கட்டத்தில் அவர் தன்னுடன் ஓடிய சீன வீரர் லியு ஷியாங்கை இடித்துத் தள்ளியதாக அந்த நாட்டு அதிகாரிகள் போட்டித் தொழில்நுட்பக் குழுவிடம் புகார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து ஓடுகள நடுவரிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அவர் டாய்ரோன் ஓடுகையில் பக்கத்தில் ஓடிய ஷியாங்கை இடித்துத் தள்ளியதை உறுதி செய்தார். இதனால் டாய்ரோனிடம் இருந்து தங்கப்பதக்கத்தை பறிக்க உத்தரவிடப்பட்டது. இதனை எதிர்த்து கியூப அதிகாரிகள் நடவடிக்கைக்கு தடை விதிக்கக் கோரும் மனுவை தாக்கல் செய்தனர். இதனை அடுத்து போட்டியின் போது எடுக்கப்பட்ட வீடியோவைப் போட்டு பார்த்த தொழில்நுட்ப குழுவினர் பதக்கம் பறிப்பு நடவடிக்கைக்கு தடை விதிக்க மறுத்ததுடன், மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

டாய்ரோனிடமிருந்து பறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் 2ஆவதாக வந்த அமெரிக்க வீரர் ஜாசன் ரிச்சர்ட்சனுக்கு (13.16 வினாடி) வழங்கப்பட்டது. மூன்றாவது இடம்பெற்ற சீன வீரர் லியு ஜியாங்குக்கு (13.27 வினாடி) வெள்ளிப்பதக்கமும், 4ஆவதாக இடம் பெற்ற இங்கிலாந்து வீரர் ஆன்ட்ரூ டர்னருக்கு (13.44 வினாடி) வெண்கலப்பதக்கமும் வழங்கப்பட்டது.

## ஏமாற்றமளித்த ஓட்டம்



(டெகு)

எனது சம்பியன் பட்டத்தை தக்க வைக்க முடியாமல்போனது மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது என உசைன் போல்ட் தெரிவித்தார்.

முதலில் 100 மீற்றர் ஓட்டத்தில் வென்ற எனது சக வீரர் யோஹன் பிளாக்குக்கு எனது வாழ்த்துக்கள். மேலும் பதக்கம் வென்ற மற்ற வீரர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். தவறான தொடக்கத்தால் எனது சம்பியன் பட்டத்தை தக்க வைக்க முடியாமல் போனது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஆனால் முந்தைய சுற்றுகளில் நான் நன்றாக ஓடினேன். இறுதிப் போட்டியில் அதிவேகமாக ஓட திட்டமிட்டு இருந்தேன். இந்தப் போட்டிக்கு தயாராக கடினமாக உழைத்தேன். நடந்த சம்பவத்தை மறந்து அடுத்த பந்தயங்களுக்காக தயாராகுவேன். 200 மீற்றர் ஓட்டத்தில் சிறப்பாக செயற்படுவேன். 100 மீற்றர் தொடர் ஓட்டத்திலும் நன்றாக ஓடுவேன் என்று கூறியுள்ளார்.

## விதி பின்பற்ற வேண்டும்

(டெகு)

ஒரு நட்சத்திர வீரராகத் திகழும் உசைன் போல்ட் சரியான முறையில் செயற்பட்டிருக்க வேண்டும் என உலக தடகள போட்டித் தொடரின் செய்தித் தொடர்பாளர் நிக் டேவிஸ் தெரிவித்துள்ளார்.

விதிமுறைகள் அனைவருக்கும் சமம் தான். உசைன் போல்ட் நட்சத்திர தடகள வீரராக இருக்கலாம். ஆனால், யாரும் தவறு செய்துவிடக் கூடாது என்பதில் நாங்கள் கவனமாக இருந்தோம். ஒரு நட்சத்திர வீரர் சரியான முறையில் செயற்பட்டிருக்க வேண்டும். இத்தொடர் முடிந்தபின், இந்த விதியை நீக்குவது குறித்து விவாதிப்போம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இது பற்றி முன்னாள் தடை ஓட்ட ஒலிம்பிக் சம்பியன் அலன் ஜோன்சன் கூறுகையில், உசைன் போல்ட் மிக வேகமான மனிதர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. போட்டியின் போது, இவர் சிறப்பான உடற்தகுதியில் இல்லை என்பது தான் உண்மை. தவிர, இதற்காக அவர் தயாராகவே இல்லை. இதில் உசைன் போல்ட் மீது தான் தவறு உள்ளது.


## அமெரிக்க வீராங்கனை 100 மீற்றரில் முதலிடம்



(டெகு)

உலக தடகள சம்பியன்ஷிப போட்டித்தொடரின் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட் டத்தில் அமெரிக்க வீராங்கனை கார்மெலிடா ஜெட்டர் (10.90 வினாடி) தங்கப்பதக்கமும், ஜமைக்கா வீராங்கனை வெரோனிகா கேம்ப்பெல் (10.97 வினாடி) வெள்ளிப்பதக்கமும், டிரினிடாட் மற்றும் டோபாக்கோ வீராங்கனை ஷெல்லி ஆன் (10.98 வினாடி) வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இதேவேளை, பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் பொட்ஸ்வானா வீராங்கனை அமன்டில் மான்ஷோ (49.56 வினாடி) தங்கப்பதக்கம் வென்றார். பெண்களுக்கான குண்டு எறிதலில் நியூசிலாந்து வீராங்கனை வாலேரி அடம்ஸ் 21.24 மீற்றர் தூரம் வீசி தங்கப்பதக்கம் வென்றார்.



இந்த ஆண்டின் 4ஆவது மற்றும் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமானபோது...

## இங்கிலாந்து பிரிமியர் கால்பந்தாட்டம் முதல் நிலையில் மான்செஸ்டர் அணி

(லண்டன்)

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் அணியும் ஆர்சனெல் அணியும் மோதின. இதில் ஆர்செனல் அணியை 8- 2 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றி பெற்றது மான்செஸ்டர் யுனைடெட்.

மான்செஸ்டர் அணியின் வெய்ன் ரூனி ஹட்ரிக் சாதனை புரிந்தார்.

ஆர்செனல் அணிக்கு தியோ வால்காட், ரொபின் வான் பெர்சி ஆகியோர் ஆறுதல் கோல்களை அடித்தனர்.

பிரிமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் அனைத்துப் போட்டிகளையும் இதுவரை வென்ற மான்செஸ்டர் யுனைடெட் முதலிடத்தில் உள்ளது. ஆர்செனல் அணிக்கு இதுவரை ஒரேயொரு புள்ளி மட்டுமே கிடைத்துள்ளது.



## மலிங்கவிற்கு அழைப்பு

(கொழும்பு)

டெஸ்ட் போட்டிகளிலிருந்து விலகிக் கொண்ட லசித் மலிங்க, தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபை சார்பில் அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்தார்.

இந்த நிலையில் டெஸ்ட் போட்டியில் விலகிக் கொண்ட மலிங்க, அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் சபை சார்பில் மலிங்கவுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர் அவுஸ்ரேலியாவுடனான 2ஆவது டெஸ்ட் போட்டிக்கான இலங்கை அணிக்கு திரும்புவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர் மீண்டும் டெஸ்ட் போட்டிக்கு திரும்புவார் என்று இலங்கை கிரிக்கெட் சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## மாந்திரீக சிகிச்சையைப் பெற்றால் மருத்துவருக்கு அறிவிக்கவேண்டும்

### இலங்கை வீரர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் காயங்களுக்கு பாரம்பரிய மாந்திரீக ரீதியான சிகிச்சைகளைப் பெறுவதானால் இது குறித்து அணியின் மருத்துவ உத்தியோகத்தருக்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்க தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து குற்றச்சாட்டில் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய உடற்கூற்று மருத்துவரான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த ஸ்டீவ் மௌன்ட் இது குறித்து அவுஸ்ரேலிய பத்திரிகையொன்றுக்கு தெரிவிக்கையில், அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடரில் பங்குபற்றும் அனைத்து வீரர்களுக்கும் இந்த ஆபத்து குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.


இத்தகைய சிகிச்சைகளைப் பெற வீரர்களுக்கு முழுமையான தடை விதிக்கப்படவில்லை எனவும் ஆனால், அவர் அத்தகைய மருத்துவர்களிடம் செல்வதற்கு முன்னர் தனக்கு அறிவிக்க வேண்டும் எனவும் ஸ்டீவ் மௌன்ட் கூறினார்.

அவுஸ்ரேலிய விளையாட்டு நிறுவகத்தில் பணியாற்றிய ஸ்டீவ்மௌன்ட், இம்மாதம் இலங்கை கிரிக்கெட் அணியின் உடற்கூற்று மருத்துவராக இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வீரர்கள் தனியான சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாகவே முன் அறிவிப்பை எமக்குத் தெரிவிக்க வேண்டும் என்று உடற்கூற்று மருத்துவர் தெரிவித்திருக்கின்றார்.

இதனை கிரிக்கெட் சபை உரிய முறையில் கடைப்பிடிக்கும் என்று இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பட்டம் பெற்ற டோனி



(லண்டன்)

இங்கிலாந்து லீ செஸ்டரில் உள்ள டி மான்போர்ட் பல்கலைக்கழகத்தினால் இந்திய அணியின் தலைவர் டோனிக்கு கௌரவ டாக்டர் பட்டம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.'

28 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய அணிக்கு நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொடுத்தமைக்காகவே இப்பட்டம் டோனிக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கௌரவ டாக்டர் பட்டம் பெற்றமை மகிழ்ச்சி என டோனி தெரிவித்தார்.

## நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகும்

### நாடாளுமன்ற செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

**தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம் மிக்க கித்துலகொட தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கும் திட்டம் முதலில் கட்டளைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு பின்னர், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகர் மற்றும் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னரே, தெரிவுக்குழு அமைப்பது குறித்த விவாதம் நடத்துவது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் நோக்கில் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு யோசனைத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இதேவேளை, இந்த யோசனைத் திட்டத்திற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி போன்ற கட்சிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக தீர்வுத்திட்டமொன்றை அரசாங்கம் முதலில் முன்வைக்க வேண்டுமென இந்தக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

## பாரிய குற்றச் செயலில் ஈடுபட்ட 250 பேருக்கு மன்னிப்பு இல்லை

(கொழும்பு)

நீண்ட காலமாக அமுலபடுத்தப்பட்டு வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட போதிலும், பாரிய பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடைய 250 குற்றவாளிகளுக்கு எவ்வித மன்னிப்பும் வழங்கப்பட மாட்டாது என சிரேஷ்ட அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என திவயின தெரிவித்துள்ளது.

இந்தச் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் மற்றும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியமை, குண்டுகளை வைத்தல், படையினரை படுகொலை செய்தல் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 250 புலிச் சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர்களுக்கு அவசரகாலச் சட்ட நீக்கத்தின் ஊடாக எவ்வித சலுகைகளும் அளிக்கப்படமாட்டாது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய உரிய முறையில் வழக்குத் தொடரப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகளுக்கு நிதியுதவி அளித்த 6பேரை கைது செய்ய பிடியாணை

(கொழும்பு)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு 100 இலட்சம் ரூபா நிதி வழங்கியமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் எதிரிகளாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் நீதிமன்றிற்கு ஆஜராகாமையால் சந்தேகநபர்கள் 6 பேரையும் உடனடியாக கைது செய்யும்படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேசுந்தர பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு நீதிமன்றிற்கு ஆஜராகாத சந்தேகநபர்கள் மேலும் சில சந்தேக நபர்களுடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி வழங்கியதால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டுள்ளார்கள் என்று நீதிமன்றில் இவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான சக்திகளே தூக்குத்தண்டனையை ரத்துச்செய்யக் கோருகின்றன

### என்கிறார் ரோகித்த போகொல்லாகம

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள மூவருக்கும் மரண தண்டனை விதிக்கப்படக் கூடாது எனக் கோரும் தரப்பினர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச் செயல் விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரும் அதேவேளை, மறுபுறத்தில் ராஜீவ் காந்தியை படுகொலை செய்தவர்களை விடுதலை செய்யுமாறு தமிழகத்தைச் சேர்ந்த சில அரசியல் கட்சிகளும் சில தரப்பினரும் கோரி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கையின் மூலம் குறித்த சக்திகளின் இரட்டை நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தருஸ்மன் அறிக்கை மற்றும் சனல்4 ஊடகம் ஆகியவற்றின் உறுதிப்படுத்தப்படாத தகவல்களின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தத் தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நபர்கள் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்பதனை எவரும் மறந்துவிடக்கூடாது.

தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கு ஐரோப்பிய நாடுகளிலும் போராட்டங்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## பொன்சேகாவின் மேன்முறையீடு அறிக்கை கோருகிறது நீதிமன்று

(கொழும்பு)

சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டமை தொடர்பான தேர்தல் திணைக்களத்தின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிக்கை கோரியுள்ளது.

தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் சரத்பொன்சேகா மனு ஒற்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி பொன்சேகாவின் மனுவுக்கு எதிரான கருத்துக்கள் இருந்தால் அவற்றை முன்வைக்குமாறே தேர்தல் திணைக்களத்திடம் தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றம் கோரியுள்ளது. தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தின்படி எதிர்வரும் மூன்றாம் திகதி இதற்கான கருத்துக்களை முன்வைக்கும் படி கோரப்பட்டிருக்கிறது.

## அரசாங்கத்தைக் கவிழ்க்க ஒத்துழைத்தால் பிரதித்தலைவர் வழங்கத் தயாரான ரணில்

### கூறுகிறார் ராஜித



(கொழும்பு)

கட்சியின் பிரதித் தலைவர் பதவியை தமக்கு வழங்குவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு அழைப்பு விடுத்ததாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ரணில் கோரியதாகவும் இதற்கு பிரதியுபகாரமாக பிரதித் தலைவர் பொறுப்பினை வழங்குவதாகவும் ரணில் வாக்குறுதி அளித்தார். எனினும், அந்த உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

செல்லிடப்பேசியில் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பி அதன் மூலம் ரணில் இந்தக் கோரிக்கையை தம்மிடம் விடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கையை தாம் நிராகரித்ததாகவும் பாவச் செயல்களில் ஈடுபடத் தயாரில்லை என அறிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவும் அவருக்கு எதிராக கட்சியில் செயற்படுவோரும் இன்று உறக்கமின்றி அவதியுறுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## டொலர்களை சேகரிக்க மனித உரிமை குறித்து பேச்சு

(கொழும்பு)

சிலர் டொலர்களுக்கு அடிமையாகி இலங்கையின் மனித உரிமைகள் குறித்து கலந்துரையாடுவதாக நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு சிரேஷ்ட அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொள்கைகள் அனைத்தும் இலங்கையின் கலாசாரத்திற்கு அமையவே காணப்படுகின்றன.

தற்போது மனித உரிமைகள் குறித்து பேசப்படுவதாகவும் மனித உரிமைகள் தொடர்பில் கதைக்கின்ற இரு குழுக்கள் தற்போது காணப்படுகின்றன.

ஒரு சாரார் இலங்கை குறித்து சிந்திக்கும் உண்மையான இலங்கையர்கள் மற்றொரு பிரிவினர் அமெரிக்க டொலர்களுக்கு அடிமையானவர்கள்.

டொலர்களைச் சேகரிப்பதற்காக சுயேச்சைக் குழுக்களை அமைத்து மனித உரிமைகள் குறித்து பேசுவதன் ஊடாக டொலர்களை சம்பாதிக்கின்றமை இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள சவாலென அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கையிடமிருந்து 80 படகுகளை கொள்வனவு செய்கிறது இந்தியா

(கொழும்பு)

இலங்கையிடமிருந்து 80 அதிவேக இடைமறிப்புப் படகுகளை கொள்வனவு செய்வதற்கான உடன்பாடு ஒன்றில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு கையெழுத்திட்டுள்ளது.

இந்தியக் கடற்படையில் அண்மையில் உருவாக்கப்பட்ட சாகர் பிரஹாரி பால் என்ற சிறப்புப் படைப்பிரிவுக்காகவே இந்தப் படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

250 கோடி ரூபா பெறுமதியான இந்த உடன்பாடு கடந்த வெள்ளிக்கிழமை கையெழுத்திடப்பட்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சந்தேகத்துக்கிடமான கப்பல்கள், படகுகளை வழிமறித்தல், மற்றும் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கே இந்தப் படகுகளை இந்தியா பயன்படுத்தவுள்ளது.

இந்தப் படகுகளை இலங்கையின் சோலாஸ் மரைன் நிறுவனம் 36 மாதங்களுக்குள் கட்டிக் கொடுக்கவுள்ளது.

கடற்புலிகளின் போர்த்தந்திரங்களை அடியொற்றி இலங்கை கடற்படை உருவாக்கியிருந்த சிறப்புப் படகுப் படையணியை முன்னுதாரணமாகக் கொண்டே இந்தியா சாகர் பிரஹாரி பால் என்ற இந்தப் படைப்பிரிவை உருவாக்கியுள்ளது.

இலங்கை கடற்படையின் சிறப்புப் படகு அணியைச் சேர்ந்த 42 கொமாண்டோக்கள் சில மாதங்களுக்கு முன்னர் மும்பைக்குச் சென்று இந்திய கடற்படையினருடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரணிலை துரத்துகின்ற போராட்டம் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னராம்

(கொழும்பு)


நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடையும் வரையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கும் போராட்டம் தற்காலிகமாக கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியைப் புனரமைப்பு செய்யும் குழுவின் வட்டாரத்திலிருந்து தெரிய வந்துள்ளது.

இதன்படி கேம்ப்ரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்திற்கு முன்பாக நடத்தப்பட இருந்த சத்தியாக்கிரகப் போராட்டம் கைவிடப்பட்டுளள்ளதாக அந்த தகவல் மேலும் தெரிவிக்கிறது.

எப்படி இருந்த போதிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது ரணில் விக்கிரமசிங்கவின் அணியினருடன் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என்று சஜித் அணியினர் எடுத்துள்ள தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இதன்படி சஜித் அணியினர் வேறாக பிரசாரப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்தவுடன் ரணில் விக்ரமசிங்கவை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கும் போராட்டம் தொடரும் என்று அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.




Mr. N.Pathmarajah
[I.S.A (Eng)]
Zonal Education Office- Islands

## General Certificate of Education (Ord.Level) Examination, December- 2011

Time: 3 Hour

# கல்வி முரசு O/L



## ENGLISH LANGUAGE PART - I

யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**1) Fill in the blanks using suitable "Prepositions".**

The city of London was founded by the Romans ................. the year 43 AD. ................. the next few years it quickly became the main trading centre in Briain.

................. two hundred years after the Romans left, the city was almost forgotten. Its full importance did not return ................. the 11th century.

................. the end of that century, the government of England was based in Westminister and the Tower of London had been started.

| at | in | for | during | until |
|---|---|---|---|---|

**2) Read the notice and answer the questions below.**

**Notice**

A meeting of the Rotary Club will be held on Monday the 1st August 2011 at 1.30 p.m. in the main auditorium. The topic for discussion will be the launching of a fund raising programme. This programme will help the differently abled persons in the local community. Our patron, the principal, will attend the meeting. All members are requested to be present.

Mas. S. Suresh
The secretary,
Rotary Club.

Mrs. R. Mano,
Principal,
25th July 2011

1. Who wrote this notice ?
.................................................
2. Whre is the meeting ?
.................................................
3. Who are wanted to be present in the meeting ?
.................................................
4. Whom are they going to help ?
.................................................
5. When is the meeting ?
.................................................
6. At what time is the meeting?
.................................................
7. What is the topic for the discussion ?
.................................................
8. ................................. is the secretary of the Rotary Club.
9. Mrs. Mano is the ................................. of the Rotary Club.
10. Write similar word to the following.
Assemble ................................. required .................................

**3) Change the following into Passive.**

1. Kamal cleans the black board.
.................................................
2. Mr. Mahes will state stories.
.................................................
3. The doctor examined the patients.
.................................................
4. The principal msupervises their work.
.................................................
5. The king Kasyapa built the sigiriya fortress.
.................................................

**4) Change the follwing into Reported Speech.**

1. Kamal said " I am happy".
.................................................
2. Mala said " I love my country".
.................................................
3. Mr. Harry said " My father went to Canada".
.................................................
4. My father said " I can swim well"
.................................................
5. The king Kasyapa said " I will be safe in the sigiriya fortress.
.................................................

**5) Write the missing noun or verb in the following chart.**

| | Noun | Verb |
|---|---|---|
| 1 | treatment | |
| 2 | behaviour | |
| 3 | demand | |
| 4 | dictate | |
| 5 | death | |
| 6 | | perform |
| 7 | | refer |
| 8 | election | |
| 9 | tolerance | |
| 10 | | register |

**6) Fill in the blanks in the following sentences selecting the correct answer**

1. The duck is an a_ _ _tic bird. ( qua, quay, kwa )
2. Wesak is _ _ _ _ brated in May. ( sele, cele, celi )
3. Sri Lanka became an independ _ _ _ state on 4th February 1948. ( ant, ent, unt )
4. We refer to a dic _ _ _ nary to learn the meaning of a word. ( sio, tio, cio )
5. Buddhists observe relig _ _ _ _ rites on Poya days. ( ious, uou, oius )

**7) Here some sentences which are mixed up. Put them in correct Order. Write the number in the relevant box. The first one is done for you.**

a. " I don't want to have a friend ship with a man who cannot even afford a wrist watch" [ ]

b. "If I tell you the time we might start a conversation" [ ]

c. A young man was travelling in a long distance train [ 1 ]

d. The old man just gave him a cold look and returned to his news paper & said [ ]

e. The young man was bored after a little while [ ]

f. He was reading a news paper [ ]

g. He wanted to start a conversation with the old man [ ]

h. His only companion on the train was an elderly gentleman [ ]

i. "I won't tell you the time" [ ]

j. The young man looked at him & asked for the time [ ]

k. The old gentleman stared at the young man. [ ]

**8) You are the secretary of the Social Services Association of your school. Write a notice calling all members of the Social Services Association to discuss about the plans to celebrate the "Children's Week".**

.................................................
.................................................
.................................................
.................................................
.................................................

**9) You are the secretary of the Social Services Association of your school. You have planned to organize an awareness programme on " Caring for Elders". Write a letter to the Director, Welfare Society including the following,**

1. The purpose of the programme
2. Date & time of it
3. Your plan
4. Request for the support
5. Invite him/ her as a guest speaker

.................................................
.................................................
.................................................
.................................................
.................................................

**10) Read the poem and answer the questions given.**

A cat mistrusts the sun
Keeps out of its way
Only where sun and shadows meet
It moves.

A horse loves the sun
It basks all day
Snorts
And beats its hooves.

The sun likes horses
But hates cats
That is why it makes hay
And heats in roofs.

1. Where does a cat move?
.................................................
2. What does a horse do all day?
.................................................
3. Which animal is hated by the sun ?
.................................................
4. How do we know that the sun likes horses ?
.................................................
5. Why does the sun heat in roofs?
.................................................

**11) You want to go to an exhibition at university of Jaffna. Write a note to your friend inviting him/her to the exhibition.**

Include the following.

1. Where you want to go
.....................................................................
2. Date and time
.....................................................................
3. How you plan to go
.....................................................................
4. Where you want him/her to meet you.
.....................................................................

**11) Frame questions.**

a. My name is Rajah
.....................................................................
b. Kumar is a doctor
.....................................................................
c. Ratha works in a bank
.....................................................................
d. I went to Colombo last month
.....................................................................
e. Thusi will go to The market with Rasi
.....................................................................

**13) Write on any one of the following.**

1) The impact of Climate changes
Use the following guide lines.
Reasons for the climate changes
Bad effects of climate changes
Steps to be taken to overcome this problem
Island wide and world wide steps to solve this problem

2) A speech on "Importance of Communication"
Types of communication
Advantages of communication
Disadvantages of communication
Your advice to improve communication in Sri Lanka

3) Complete the story
I looked at ....................... and started running....................
Finally, I came to know that it was fun and enjoyable.
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................
.....................................................................

# மரண தண்டனை ஒழிப்பும் ராஜீவ் கொலைக்கு உதவியவர்களும்

**– மாயா**

மரண தண்டனை குறித்த விவாதத்தை ராஜீவ் காந்தி கொலைக்கு உதவியவர்கள் என்று நீதிமன்றங்களால் நிரூபிக்கப்பட்ட மூவரின் தனிப்பட்ட சோகத்தோடு சேர்த்து விவாதிப்பது துரதிஷ்டமான ஒன்று. மரண தண்டனை ஒழிப்பு என்ற உன்னதமான நோக்கத்தை, ஒரு தேசத்திற்கும் அதன் அச்சாணியாக இருக்கும் அரசியல்-அதிகார அமைப்பு முறைக்கும் சவால் விடுத்த ஒரு படுகொலையின் பின்னணியில் விவாதிப்பது ஒரு கையறு நிலையில் நிறுத்துகிறது. யார், எந்தக் குற்றத்தைச் செய்திருந்தாலும் அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கக்கூடாது என்பதுதான் மனிதாபிமானத்திற்கு உயிர் கொடுக்கும் அந்தக் கோரிக்கையின் நோக்கம் என்றாலும், அந்த நோக்கத்தை வெற்றிகரமாக அடைவதற்கு சாகுவதமான தருணமாக இது இருக்காது என்பதே யதார்த்தம். மரண தண்டனையை ஒழித்துவிட்டால்

> **சொந்த மக்களையே கொன்ற விடுதலைப்புலி தலைமையைப் போலவே இங்குள்ள புலி ஆதரவாளர்களும் கண்மூடித்தனமாக இருப்பதால் அவர்கள் மூவரையும் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு விரைவில் தூக்கிலிடுவதற்கான காரியங்களையே செய்கிறார்கள்.**


மும்பைத் தாக்குதல் குற்றவாளி அஜ்மல் கசாபையும் தூக்கில் தொங்க விட முடியாது என்பது நமது வெறி பிடித்த வலதுசாரிகளைத் துன்புறுத்தும் கேள்வி.

எனினும் ராஜீவ் கொலையாளிகளுக்கான மரண தண்டனை விடயத்தில் ஒரு முரண்பாடு தெரிகிறது. நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் தொடர்புடையவர் என்று நீதிமன்றங்களால் நிரூபிக்கப்பட்ட அ்.ப்சல் குருவுக்கும் ராஜீவ் கொலையாளிகளுக்கும் ஒரே நேரத்தில்தான் கருணை மனு நிராகரிக்கப்படுகிறது. ஆனால் அ்.ப்சல் குருவுக்கு நிர்ணயிக்கப்படாத தூக்கு நாள் இந்த மூவருக்கும் தீர்மானிக்கப்படுகிறது. அ்.ப்சல் குருவைத் தூக்கிலிட்டால் இந்தியா முழுவதும் பரவலாகவுள்ள சிறுபான்மை முஸ்லிம்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற காங்கிரஸின் பயமே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக, பேரறிவாளன், சாந்தன், முருகனுக்குத் தூக்கு தரக்கூடாது என்று பேசுகிறவர்கள் தமிழகத்தில் சிறுபான்மையினராக இருக்கும் புலி ஆதரவாளர்களும், தமிழீழ ஆதரவாளர்களும், தமிழ் தேசிய ஆதரவாளர்களும்தான் என்ற கணிப்பு காங்கிரஸிக்கு உள்ளது. அப்படிப்பட்ட பின்னணியில் புற்றுநோய் அறுவை சிகிச்சைக்காக சோனியா காந்தி வெளிநாட்டில் இருக்கும் சமயத்திலேயே இதை முடித்துவிடுவது அவர்களுக்குச் சௌகரியமானதாக, பழியிலிருந்து தப்ப உதவுவதாக இருக்கும் என்று கணிக்கக்கூடும்.

தமிழ் மண்ணிலேயே பிரதமராக இருந்த ஒரு தேசியத் தலைவரைக் கொன்றது சிறுபான்மையினரான ஒரு பிரிவினரைத் தவிர, தமிழ்ச் சமூகத்தையே குற்ற உணர்ச்சியில் தள்ளியது. இந்திய அமைதிப் படை இலங்கையில் செய்த அராஜகங்கள், இழிவுகளால் ராஜீவ் கொலையை நியாயப்படுத்தியவர்கள் அப்போது இருந்திருப்பார்கள். இந்தக் கொலையில் பங்கெடுத்ததாகக் கூறப்படும் பேரறிவாளனுக்கும் கூட அதுவே உந்துதலாக இருந்திருக்கக் கூடும். ஒரு உணர்ச்சிகரமான பார்வையில் (அப்போது பேரறிவாளனுக்கு வெறும் 19 வயது என்று கூறப்படுகிறது) அது நியாயமான ஒன்றாகக்கூட தெரிந்திருக்கும். ஆனால் கொலைக்குக் கொலை தீர்வாக முன்னிறுத்தப்படும்போது அது முடிவில்லாமல் இரத்தம் இந்த மண்ணில் சிந்தப்படக் காரணமாக இருக்கிறது என்பதற்கு இதுவே சாட்சியாக மாறுகிறது.

ராஜீவைக் கொல்வதன் மூலம் அவர்கள் ஒரு தனி நபருக்கோ, அவரது குடும்பத்திற்கோ அல்லாமல் ஒரு தேசத்திற்கே சவால் விட்டார்கள் என்பதை 2009 இல் முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகள் உணர்ந்திருப்பார்கள். விடுதலைப்புலிகள் தொடங்கி வைத்த கொலை வெறித் தாண்டவம் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்ப் பலியோடு, மூன்று பேரை 20 வருடங்களாக அணு அணுவாகக் கொன்று வருகிறது.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பும் புலி ஆதரவு குழுக்களும் அதன் தலைவர்களும் இரண்டு துருவங்களில் நிற்கிறார்கள்.



ஒன்று, அவர்கள் எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள். அவர்களை அநியாயமாகத் தண்டிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது ஒரு வேளை உண்மையாகக்கூட இருக்கலாம். ஆனால் நீதித் துறையின் பல்வேறு மட்டங்களில் பல வருடம் விசாரணை நடத்தி அவர்கள் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட பிறகு இத்தகைய வாதம் மக்களிடம் எடுபடாது. இரண்டு, ராஜீவ் கொலையை எந்த வகையிலும் கண்டிக்காமல் அல்லது ராஜீவ் கொலை நியாயம்தான் என்ற உடல்மொழியோடு அவர்களை விடுவிக்கச் சொல்கிறார்கள். ராஜீவ் கொலை விசாரணையை மேலோட்டமாக அணுகினால்கூட தெரியும் ஒரு உண்மையை இவர்களின் புலிப் பாசம் மறைக்கிறது.

ராஜீவ் கொலையோடு நேரடியாகத் தொடர்புடையவர்கள், அதன் சதித் திட்டத்தில் உள்வட்டத்தில் இருந்தவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு அல்லது தற்கொலை செய்துகொண்டுவிட்டார்கள். இப்போது எஞ்சியிருப்பது அந்தக் காரியத்திற்குத் தெரிந்தோ, தெரியாமலோ உதவிய சதித் திட்டத்தின் வெளி வட்டத்தில் இருப்பவர்கள்தான். உதாரணத்திற்கு தனு அணிந்த பெல்ட் வெடிகுண்டிற்கு பேட்டரி வாங்கிக்கொடுத்ததும் இலங்கையில் இருந்த பிரபாகரனோடு சிவராசன் உரையாடுவதற்குத் தேவையான லாரி பேட்டரி வாங்கிக் கொடுத்ததும்தான் பேரறிவாளன் மீதான சி.பி.ஐ.யின் குற்றச்சாட்டு. ஆனால் சதியின் உள்வட்டத்தைச் சேர்ந்த யாரையும் பிடித்து தூக்கில் தொங்க விட்டுத் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாத அலலது நீதியைப் பரிபாலனம் செய்து விட்டதாக பீற்றிக்கொள்ள முடியாத இந்திய அரசியல்-அதிகார அமைப்பு முறை, சதியின் வெளி வட்டத்தில் இருந்தவர்களைத் தூக்கிலிட்டு தன்னைச் சாந்திப்படுத்திக்கொள்ள விரும்புகிறது. இந்த உண்மையை வெளிப்படுத்துவதாக இருந்தால் புலிகள் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் சொந்த மக்களையே கொன்ற விடுதலைப்புலி தலைமையைப் போலவே இங்குள்ள புலி ஆதரவாளர்களும் கண்மூடித்தனமாக இருப்பதால் அவர்கள் மூவரையும் காப்பாற்றுவதாகக் கூறிக்கொணடு விரைவில் தூக்கிலிடுவதற்கான காரியங்களையே செய்கிறார்கள்.

நாடாளுமன்றத் தாக்குதல் விடயத்தில் வெறும் கருவியாக மட்டுமே இருந்த அ்.ப்சல் குருபோலவே, பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரும் பலிக்கடா ஆக்கப்படுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நாடாளுமன்றத் தாக்குதலில நீதியை நிலை நாட்டிவிட்டதாக பாவ்லா காட்ட அ்.ப்சல் குருவைத் தூக்கிலிட விரும்புவது போலவே ராஜீவ் கொலையிலும் பலிக்கடாக்களை இந்திய அரசு விடப்போவதில்லை. அவர்களிடம் வைக்க ஒரே ஒரு கோரிக்கைதான் நம்மிடம் இருக்கிறது: ராஜீவ் கொலைக்காக இலங்கையில் 40,000 அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தாயிற்று. இன்னும் மூன்று உயிர்களைக் கூடுதலாகப் பலியிட வேண்டுமா?

**நன்றி : உயிரோசை**



## சுவாரஸ்யமான வாழ்க்கை

பிரித்தானியாவில் ஹம்ஷயரிலுள்ள மார்வெல் சரணாலயத்தில் ஒட்டர் பிராணியின் வாழ்க்கை பார்ப்பதற்கு சுவாரஸ்யமாக உள்ளது. மதியத்திற்கு மீனை உணவாக உண்ட பின் குழந்தை ஒட்டர் பிராணி தனது பெற்றோரால் இரண்டு பக்கமும் முத்தமிடப்படும் அரிய காட்சி ஹம்ப்ஷயரிலுள்ள மார்வெல் சரணாலயத்தில் படம்பிடிக்கப்பட்டது.

பெண் ஒட்டர்கள் 2 வருடங்களில்தான் இனப்பெருக்கத் தன்மையை அடைகின்றன. ஆண் ஒட்டர்களிற்கு 3 வருடம் எடுக்கும். ஓர் இளம் ஒட்டரினால் 2 மாதங்களின் பின்னரே வெளியே வந்து நீந்தமுடியும். இது 1 வருடம் வரையிலும் தனது குடும்பத்துட னேயே வாழ்கின்றது. முழுவதுமாக 16 வருடங் கள் இவை உயிர்வாழ்கின்றன.



## பயன்படுத்தினார்களா ஜெல்?

3000 வருடங்களின் பின்னரும் மம்மிகளின் தலையில் சுருள் காணப்படுகின்றது. புராதன எகிப்தியர்கள் தமது தலைமுடியை சுருளாக்க ஜெல் போன்ற பொருட்களைப் பயன்படுத்தியுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆண், பெண் மம்மிகளின் தலைகளில் அழகூட்டும் ஜெல்கள் பயன்படுத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றை இவர்கள் இறந்தபின்னர் கூட அவர்களது தலைமுடியை அழகூட்டப் பயன்படுத்தியதாகத் தெரியவருகின்றது. மேற்குப் பாலைவனத்தில் Dakhleh Oasis எனும் இடத்தில் கிரேக்க-ரோமானிய மயானத்திலிருந்து பெறப்பட்ட 3500-2300 காலத்திற்கிடைப்பட்ட மம்மிகளிலிருந்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நாம் இன்று பயன்படுத்துவதைப் போன்ற கொழுப்புகளையே புராதன எகிப்தியர்களும் பயன்படுத்தியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## வெட்டப்பட்ட பல்

அமெரிக்காவில் உள்ள பியூட்டோ றிக்கோவின் மிருகக் காட்சிச் சாலையில் உள்ள நீர் யானைக்கு பற்கள் அளவிற்கு அதிகமாக வளர்ந்துள்ளது. 3000 இறாத்தல் நிறையுள்ள இந்த நீர்யானைக்கு பல் அளவிற்கதிகமாக வளர்ந்ததால் உணவை உட்கொள்ள மறுத்தது. பியூட்டோ றிக்கோவின் பயாமன் மிருகக்காட்சிச் சாலையில் அனை வருக்கும் விருப்பமான நீர்யானை உணவு உண்ண முடியாமல் சிரமப்பட்டதால் வட கரோலினா மிருகக் காட்சிச்சாலையின் மிருக வைத்தியர் ஒருவரால் அதன் பல் வெட்





டப்பட்டது. ஏனையவற்றைப் போல நீர்யானைக்கு மயக்க மருந்து கொடுக்க முடியாது என்பதால் அதனை இருத்திய நிலையில் அரை மயக்கத்தில் இருக்கக் கூடிய அளவில் மருந்து கொடுத்தபின் பல்லை வெட்டினர். இரும்பு வெட்டும் கத்திகொண்ட வாளினால்தான் இதன் பல் வெட்டப்பட்டது.

## இறக்கை இல்லாமல்




சீனாவின் ஷாண்டாங் மாகாணத்தில் உள்ள லாஷான் நகரில் உள்ள பண்ணை ஒன்றில் இறக்கையே இல்லாமல் கோழி ஒன்று கோழிக்குஞ்சை பொரித்தது. மற்றக் கோழிகள் 2 முதல் 3 கிலோ இருக்கிறது. இது அரை கிலோதான் இருக்கிறது. இதை கிச்சனில் 'சிக்கன்' ஆக்குவதும் ஈஸி. 'உரித்தே' பிறந்ததால் உரிக்க வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாகக் கோழியைப் பார்த்தால் பூனை விரட்டும். மற்ற கோழிகளை பார்த்தால் பாய்கிற பூனைகள்கூட பின் வாங்குகிறதாம். இந்த அதிசய கோழியை பார்க்க வெளியூர்களில் இருந்து மக்கள் வருகிறார்கள்.

## பயங்கரமாக பறக்கும்


இந்தோனேசியாவின் சுலாவெசி எனும் தீவில் அண்மையில் புதிய வகை குளவி வகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


முன்னங்கால்களை விடவும் நீளமான தாடைகள் கொண்டு நச்சுத்தன்மையுடன் காணப்படுகின்றது இந்தக் குளவி. குளவிக் குடும்பத்தின் Komodo dragon எனும் பிரிவைச் சேர்ந்த தாகக் கருதப்படும் இதன் ஆண் குளவியானது இரண்டரை அங்குல நீளமாகக் காணப் பட்டது. ஆண் குள வியை விடவும் நீளங்கூடிய தாகக் காணப்படும் இது எப்படித் தனது உணவை உண்கின் றது என விஞ்ஞானிகள் வியக்கின்றனர். அத்துடன் இந்தோனேசியா வில் தேசிய அடை யாளமாகக் கருதப்படும் காவியப் புராணத்தில் வரும் பாத்திரமான மனிதனும் பறவையும் சேர்ந்ததாகக் காணப்படும் ஒரு பறவையின் பெயரிலேயே இக்குளவியும் 'கருடா' என்று பெயர்சூட்டப்பட்டது. கலிபோர்ணியாப் பல்கலைக்கழகப் பூச்சியியலாளரால்தான் இத்தீவில் இக்குளவி கண்டுபிடிக்கப்பட்டது.




## உண்மையா...?

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் நகரத்தில் உள்ள Abhaneri என்கிற கிராமத்தில் அமையப் பெற்று உள்ளது Chand Baori கிணறு. 10 ஆம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்டது. தண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்கின்றமைக்கு இந்தியர்களால் கையாளப்பட்ட அன்றைய உயர் தொழி நுட்பத்துக்கு சான்றாக உள் ளது. 30 மீற் றர் ஆழம் உடை யது. 13 மாடி கள், 3500 படிகள் கொண்டது. கோடை காலத்தில்கூட தண் ணீர் வற்றிவிடாது. பேய்கள்தான் இக்கிணற்றை ஒரு இரவுக்குள் கட்டி முடித்தன என்பது ஐதீகம். இக்கிணற்றுக்குள் நாணயக் குற்றியை போடு கின்ற பட்சத்தில் மீண்டும் எடுப்பது முடியாத காரியம்.





## இணையத்தில் 60 செக்கன்களில்

முதன் முதலில் இராணுவத்தின் பயன்பாட்டிற்காக கண்டுபிடிக்கப்பட்ட இணையம் அதன் அபரிமிதமான வளர்ச்சியால் தற்பொழுது சிறிய கிராமங்களில் கூட இந்த வசதியைப் பயன்படுத்துகின்றனர்.

சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் தற்பொழுது இணையம் என்பது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

அது கல்விக்காக இருக்கலாம் அல்லது தொழில் சம்பந்தமாக இருக்கலாம் அல்லது சமூக தளங்களில் நண்பர்களுடன் அரட்டை அடிக்க இப்படி பல வழிகளில் இணையம் என்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இப்படி பலருக்கு உதவ பல தளங்கள் இணையத்தில் உள்ளது. இந்த இணைய உலகில் ஒவ்வொரு 60 வினாடிகளுக்கும் இடையே நடைபெறும் சுவாரஸ்யமான தகவல்களை காண கீழே தொடருங்கள்.

1. 168 மில்லியன் மின்னஞ்சல்கள் மற்றவர்களுக்கு அனுப்பப்படுகிறது.
2. 1500+ புதிய பதிவுகள் வெளியிடப்படுகின்றன. மற்றும் 60+ புதிய புளொக்குகள் தொடங்கப்படுகின்றன.
3. 694,445 தேடல்கள் கூகுள் தேடியந்திரத்தில் நிகழ்கிறது.
4. 70+ புதிய டொமைன் பெயர்கள் பதிவு செய்யப்படுகின்றன.
5. 695,000 + புதிய அப்டேட்கள் பேஸ்புக்கில் பகிரப்படுகிறது மற்றும் 510,040 புதிய கமெண்ட்டுகள் பேஸ்புக்கில் போடப்படுகிறது.
6. 98,000 புதிய Tweets டுவிட்டரில் பகிரப்படுகிறது மற்றும் 320+ புதிய அக்கௌன்ட்டுகள் டுவிட்டரில் பதிவு செய்யப்படுகிறது.
7. யூடியூபில் 600 + புதிய வீடியோக்கள் பகிரப்படுகிறது மற்றும் 25+ மணி நேரம் வாசகர்களால் செலவழிக்கப்படுகிறது.
8. 1700 + பயர்பொக்ஸ் உலவி தரவிறக்கம் செய்யப்படுகிறது.
9. ஸ்கைப்பில் 370,000 நிமிடங்கள் பேசப்படுகிறது.

## ஒரே நேரத்தில் 7 தேடுபொறிகளில் தேடுவதற்கு...

தேடுபொறி என்றதும் நாம் உடனடியாகச் சொல்வது கூகிள் மட்டும் தான். ஆனாலும் பல தேடுபொறிகள் கூகிளிடம் இல்லாத தகவல்களையும் நமக்குக் கொடுக்கிறது. இதற்காக நாம் ஒவ்வொரு தளமாகச் சென்று தேட வேண்டாம். ஒரேதளத்தில் இருந்துகொண்டே நாம் தட்டச்சு செய்து கொண்டிருக்கும் போது விருப்பமுடன் தேடி ஒரேதளத்தில் கொடுக்கிறது. இதைப் பற்றித்தான் இந்தப் பதிவு. 7 பிரம்மாண்ட தளங்களின் துணையுடன் நாம் தேடும் வார்த்தைக்கே உதவி செய்ய ஒருதளம் இருக்கிறது. கூகிள், யாகூ, ஆஸ்க், விக்கிபீடியா, அன்சஸ்வர்ஸ், கொம், யூடியுப், அமேசான் போன் அனைத்திலும் மிக விருப்புடன் தேடக்கூடிய வார்த்தைக்கு உதவி செய்கிறது.

இந்தத்தளத்திற்குச் சென்று தேடுதல் கட்டத்திற்குள் என்ன தேட வேண்டுமோ அதற்கான வார்த்தையைக் கொடுத்ததும் தானாகவே ஒவ்வொரு தேடுபொறியிலும் எந்த வார்த்தை அதிகமாக தேடப்பட்டிருக்கிறதோ அந்த வார்த்தைக்கான Suggestion Keyword கொடுக்கப்பட்டிருக்கும். இதிலிருந்து நாம் எந்தத் தளத்தில் தேட வேண்டுமோ அந்தத் தளத்தைச் சொடுக்கி நாம் தேடியவற்றை விரிவாக பார்க்கலாம். தேடுவதற்கு நேரம் இல்லை என்று சொல்லும் அனைவருக்கும் இந்தத் தளம் தேடும் நேரத்தை மிச்சப்படுத்திக் கொடுக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இணையத்தள முகவரி :http://www.soovle.com/

கணினி முலை

## இந்தியச் செய்திகள்

# இந்தியாவில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்வதாகத் தகவல்

(சென்னை)

இந்தியாவில், ஐந்து பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது என்று, சென்னை மருத்துவக் கல்லூரி நீரிழிவுத் துறை பேராசிரியர் பெரியாண்டவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பெரியாண்டவர நிருபர்களுக்கு கூறியதாவது:

இந்தியாவில், முன்னாளில் நான்கு சதவீதமான மக்களுக்கு, நீரிழிவு நோய் இருந்தது. தற்போது, 14 சதவீதமாக உயர்ந்துள்ளது. வரும் 2025 ஆம் ஆண்டில், 20 சதவீதமாக உயர வாய்ப்புள்ளது.

தற்போது, ஐந்தில் ஒருவருக்கு நீரிழிவு நோய் உள்ளது. நீரிழிவு நோயால் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு உள்ளிட்ட, பல நோய்கள் வரும். இந்நோயை கட்டுப்படுத்தாவிட்டால், நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படும். இந்தியர்களின் உடம்பில் உள்ள அணுக்கள், உடல் சார்ந்த கடும் உழைப்புக்கானவை.

ஆனால், நாம் உடல் சார்ந்த வேலைகளைத் தவிர்த்து, அறிவு சார்ந்த வேலைகளை மட்டும் செய்கிறோம்.

இதனால், நீரிழிவு நோய் எளிதாக நம்மிடையே வருகிறது. இந்நோய் வராமல் தடுக்க, உணவில் கட்டுப்பாடு வேண்டும். அளவுக்கு அதிகமாகச் சாப்பிடாமல், சிறிதளவு உணவையே உட்கொள்ள வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். இதன் மூலம், நீரிழிவு நோயை கட்டுப்படுத்த முடியும். எனக் கூறினார்.

# மும்பையில் இரகசியமாக நடந்தேறிய பிரபுதேவா - நயன்தாரா திருமணம்?

(மும்பை)



நடிகர் பிரபு தேவா-நயன்தாரா திருமணம் மும்பையில் இரகசியமாக நடந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன


முன்னதாக நயனதாராவை மணப்பதற்காக பிரபு தேவா முதல் மனைவி ரம்லத்தை விவாகரத்து செய்திருந்தார். நயன்தாராவும் கிறிஸ்தவ மதத்தில் இருந்து இந்து மதத்துக்கு மாறினார்.

இதையடுத்து இருவருக்கும் விரைவில் திருமணம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. திருமண ஏற்பாடுகளும் நடந்து வந்தன. மும்பை அல்லது திருப்பதி கோவிலில் திருமணம் நடக்கலாம் என்று கூறப்பட்டது. இந்த நிலையில் யாரையும் அழைக்காமல் இருவரும் இரகசியமாக திருமணம் செய்து கொண்டதாக தற்போது செய்தி வெளியாகியுள்ளது.

இத்திருமணத்தில் இருவரின் பெற்றோர்கள் மட்டும் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

இந்து முறைப்படி புரோகிதர்கள் வைத்து வேள்வி வளர்த்து இந்த திருமணம் நடந்தது என அந்த செய்திகள் தெரிவிக்கின்றன. திருமணத்தை மும்பையில் பதிவு செய்ய அவர்கள் இருவரும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# கொச்சி விமான விபத்து ஏழு பயணிகள் காயம்



கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் ஓடு பாதையை விட்டு விலகிச்சென்ற விமானத்தால் ஏழு பயணிகள் காயமடைந்தனர். பஹ்ரைன் நாட்டிலிருந்து கொச்சிக்கு கல்ப் ஏர் என்ற தனியார விமானம் புறப்பட்டு வந்தது. விமானம் கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் தரை இறங்க முற்பட்ட போது அதன் ஓடுபாதையிலிருந்து விலகிச் சென்றது. இதனால் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் விமானத்தில் பயணம் செய்த பயணிகளில் ஏழு பேர் காயமடைந்தனர். மேலும் விமானததில் பயணம் செய்த 130 இற்கும் மேற்பட்ட பயணிகள் பத்திரமாக தரையிறக்கப்பட்டனர்

# போலிக் கடவுச்சீட்டில் பிரான்ஸ் செல்ல முயன்ற நான்கு இலங்கைத் தமிழர்கள் பிடிபட்டனர்

(சென்னை)

சென்னையிலிருந்து, போலி கடவுச்சீட்டு மூலம், சிங்கப்பூர் வழியாக பாரீஸ் செல்ல முயன்ற, இலங்கையைச் சேர்ந்த நால்வரை, விமான நிலைய பொலிஸார் கைது செய்தனர். இலங்கையைச் சேர்ந்தவர்கள் செந்தூரன் 26, ஸ்ரீராம் 37, சசிதரன், 26, ராஜேந்திரன், 24 ஆகியோர் கைதானவர்கள் ஆவர்.

இலங்கையிலிருந்து, சில ஆண்டுகளுக்கு முன் வந்த இவர்கள், இராமேஸ்வரம், கும்மிடிப்பூண்டி, திருச்சி ஆகிய இடங்களிலுள்ள அகதிகள் முகாமில் தங்கியிருந்தனர். பிறகு, முகாமிலிருந்து வெளியேறிய நால்வரும், சென்னை, போரூரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, ஒன்றாகத் தங்கினர்.

பிரான்சில் வேலை பார்த்து சம்பாதிக்கத் திட்டமிட்ட நால்வரும், இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றால் விசா கிடைக்காது என்பதால், போலி ஆவணங்களை கொடுத்து, இந்தியன் கடவுச்சீட்டைப் பெறத் திட்டமிட்டனர். இதற்காக ஏஜன்ட்டை சந்தித்து, தலா ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தனர். சில தினங்களில் நால்வரின் பெயரில், கடவுச்சீட்டு, விசா கிடைத்து கடந்த 16 ஆம் திகதி, சென்னையிலிருந்து புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் சிங்கப்பூர் சென்றனர்.

அங்கிருந்து பாரீஸ் செல்ல முயன்றபோது, போலிக் கடவுசீட்டை அவர்கள் பயன் படுத்தியுள்ளதை, சிங்கப்பூர் விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள் கண்டுபிடித்து, நால்வரையும் சிறையில் அடைத்தனர். கடந்த 28 ஆம் திகதி, சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட நால்வரையும், சிங்கப்பூர் பொலிஸார் சென்னைக்கு திருப்பி அனுப்பினர். நேற்று முன்தினம் இரவு விமான நிலைய பொலிஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

# கொமன்வெல்த் ஊழல் விசாரிக்க சிறப்புக்குழு

(புதுடில்லி)

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பான புதிய வழக்குகளை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழுவை சி.பி.ஐ நியமித்துள்ளது.

இந்த வழக்குகளில் பெரும்பாலானவை டில்லி மாநகராட்சி, பொதுப் பணித்துறை, டில்லி மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதிராகத் தொடரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் அண்மையில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் மேற்கண்ட அமைப்புகளுக்கு முறைகேடுகளில் தொடரபு இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# குடாநாட்டில் டெங்குநோயைத் தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வடகீழ் பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோய் மிகத் தீவிரமாகப்பரவி உயிரிழப்புக்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் ஒகஸ்ட் மாதத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இம்மாதத்தில் இதுவரை 19 நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்.மாநகர பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவன் டெங்கு நோயிற்குப் பலியாகியுள்ளார். தற்போது விடுமுறைக்காலமாகையால், தென்பகுதியிலிருந்து யாழ். மாவட்டத்திற்கும், யாழ். மாவட்டத்திலிருந்து தென் பகுதிக்கும் ஏராளமான மக்கள் வந்து சென்றவண்ணம் உள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தற்போது தீவிரமாக உள்ளது.

எனவே அனைத்துத் தரப்பினரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு தமது பங்களிப்பையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

### டெங்குக்கட்டுப்பாட்டுநடவடிக்கைகள

சகல அரச, தனியார் நிறுவனங்களும் வாரத்திற்கு ஒரு தடவை பணியாளர்களால் சிரமதான அடிப் படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

- வர்த்தக நிலையங்கள் உரிமையாளர்களால் கிரமமாக துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டு முதல் மூன்று நாட்களுக்குள் மாணவர்களின் பங்களிப்புடன் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்படவேண்டும்.
- தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களினால் துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- வைத்தியசாலைகள், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளால் ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவு செய்யப்படவேண்டும்.
- வணக்கஸ்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- தனியார் வீடுகள் உரிமையாளர்களால், குடியிருப்பாளர்களால் துப்பரவு செய்யப்படவேண்டும்.
- பராமரிப்பற்ற வீடுகள், காணிகள் உரிமையாளர்கள், பராமரிப்பாளர்களால் துப்புரவு செய்யப்பட வேண்டும்.
- பொதுச்சந்தைகள், மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்புரவு செய்யப்படவேண்டும்.
- கழிவுநீர் வாய்க்கால்கள், உள்ளூராட்சி மன்றங்களால் துப்பரவு செய்யப்பட வேண்டும். தேங்கி நிற்கும் கழிவுநீர் வாய்க்காலகளில் கிருமிநாசினிகள் விறிறப்படவேண்டும்.
- திண்மக்கழிவுகள் கிரமமாக துப்புரவு செய்ய ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களில் BTI பக்ரீரியா விசிற சுகாதார வைத்திய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதேச மட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரதேச செயலாளர் தலைமையிலான பிரதேச டெங்கு கட்டுப்பாட்டு குழு ஒன்றிணைக்கும். இதற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வாராந்தம் இடம்பெறும்.

எனவே, அனைவரும் ஒன்றிணைந்து ஆட்கொல்லி நோயான டெங்கு நோயைக் கட்டுப்படுத்த எமது பங்களிப்பை வழங்குவோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்

பெயர்: பு.மிதுனா
முகவரி: லவ்லேன் உடுவில்.



31.08.2011

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கடாபியின் குடும்பத்தினர் அல்ஜீரியாவிற்கு தப்பியோட்டம்

உலகச் செய்திகள்

லிபியாவில் புரட்சிப்படையினரின் தாக்குதலை சமாளிக்க முடியாமல் கடாபியின் மனைவி, மகள் மற்றும் மகன்கள் ஆகியோர் அல்ஜீரியா நாட்டிற்கு தப்பி ஓடியுள்ளனர்.

கடாபியின் மனைவி சபியா, மகள் ஆயிஷா மற்றும் மகன்கள் முகமட், ஹனிபியல் ஆகியோர் அல்ஜீரியாவிற்கு நேற்று முன்தினம் காலை தப்பி ஓடி வந்துள்ளனர் என்று அல்ஜீரிய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அல்ஜீரிய தூதுர் கூறுகையில்,"அவர்கள் மனித நேய அடிப்படையில் வரவேற்கப்பட்டு உள்ளனர்" என்றார்.

லிபியாவிற்கு அருகாமையில் துனிஷிய மற்றும் அல்ஜீரியா நாடுகள் உள்ளன. இதில் அல்ஜீரியாவுடன் கடாபி குடும்பத்தினருக்கு சுமூக உறவு உள்ளது. எனவே அவர்கள் அந்த நாட்டிற்கு தப்பி ஓடி உள்ளனர்.

அவர்களது வருகையை அல்ஜீரியா அரசும் எதிர்க்கவில்லை. அவர்களுக்குரிய ஏற்பாடுகளைச் செய்து தந்துள்ளது. கடாபி குடும்பத்தினர் நேற்று முன்தினம் காலை 8.45 மணிக்கு உள்ளூர் நேரப்படி லிபிய எல்லையைக் கடந்து அல்ஜீரியாவிற்குள் நுழைந்தனர்

இதற்கிடையே லிபியாவில் கடாபி இராணுவத்தினர் கொன்று குவித்து புதைத்த ஆயிரக்கணக்கானவர்கள் உள்ள 4 கல்லறைகளை கண்டுபிடித்துள்ளதாக புரட்சிப்படையினர் தெரிவித்தனர். அத்துடன் கடாபி ஆதரவாளர்கள் உள்ள பகுதியை புரட்சியாளர்கள் தொடர்ந்து கைப்பற்றி வருகின்றனர்.

# கடாபியின் மகன் காமிஸ் தெற்கு திரிபோலியில் பலி

லிபிய தலைவர் கடாபியின் மகன் காமிஸ் தெற்குத் திரிபோலியில் கொல்லப் பட்டதாக கிளர்ச்சியாளர்களின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

தர்ஹூனா அருகே ஒரு இடத்தில் காமிஸ் கொல்லப்பட்டதாக கிளர்ச்சியாளர்களின் தலைவர் ஒருவர் உறுதிப்படுத்தினார் என எதிர்த்தரப்பு நீதி மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் முகமது அல்-அல்லாகி தெரிவித்தார்.

சண்டையில் அவர் கொல்லப்பட்டு பின்னர் புதைக்கப்பட்டதாக அந்தத் தலைவர் தெரிவித்தார் என்று அல்லாகி குறிப்பிட்டார்

# தனது பெண் மெய்க்காப்பாளர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்திய கடாபி



பதவியில் இருந்து நீக்கப்பட்ட லிபிய அதிபர் கடாபி தனது பெண் மெய்க்காப்பாளர்கள் 5 பேரை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இச்செய்தியானது சன்டே ரைம்ஸ் ஒப் மால்டா நாளிதழில் வெளியாகியுள்ளது. இது குறித்து அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: பதவியிறக்கப்பட்ட லிபிய அதிபர் கடாபியின் முன்னாள் பெண் மெய்க்காப்பாளர்கள் 5 பேர் பெங்காஸியைச் சேர்ந்த மனோதத்துவ நிபுணர் செஹாம் செர்கிவாவிடம் கடாபியும், அவரது மகன்களும் தங்களை போதும் என்ற அளவுக்கு அனுபவித்து விட்டு தூக்கி எறிந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

பெண் மெய்க்காப்பாளர்களை முதலில் கடாபி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். அவருக்குப் பிறகு அவரது மகன், அடுத்து உயர் அதிகாரிகள் என்று பலர் பலாத்காரம் செய்துள்ளனர்.

1970களில் இருந்து அன்மைக்காலம் வரை எப்பொழுதுமே கடாபியைச் சுற்றி அமேசானியன் கார்ட் என்று அழைக்கப்படும் அவரது பெண் மெய்க்காப்பாளர்கள் இருப்பார்கள். அவர்கள் இ ாணுவ உடை அணிந்து முழு அலங்காரத்துடன் தான் காணப்படுவார்கள்.

கடாபியைக் காப்போம் என்று 30 பெண் மெய்க்காப்பாளர்கள் சபதம் எடுத்திருந்தனர். அவர்கள் கடாபியை நிழல் போன்று தொடர்வார்கள். 1998ம் ஆண்டு கடாபி மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது ஒரு பெண் மெய்க்காப்பாளர் பலியானார், இருவர் படுகாயம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலா ஜனாதிபதிக்கு மீண்டும் புற்றுநோய் சிகிச்சை



வெனிசுலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் புற்றுநோய் காரணமாக அவதிப்படுகிறார். கடந்த ஜூன் மாதம் புற்றுநோய்க் கட்டி கியூபாவில் அகற்றப்பட்டது.

அதையடுத்து இரண்டு கீமோதெரபி சிகிச்சை அங்கு மேற்கொள்ளப்பட்டது. சாவேசுக்கு மூன்றாவது முறை கீமோதெரபி சிகிச்சை வெனிசுலா தலைநகர் காரகாசில் உள்ள மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது. தனக்கு அளிக்கப்படும் சிகிச்சை திருப்தியாக உள்ளது என சாவேஸ் தெரிவித்தார்.

புற்றுநோய் செல்கள் மீண்டும் ஏற்படாமல் இருக்க இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. சாவேஸ் புற்றுநோயால் பாதித்து இருப்பது வெனிசுலா அரசியலில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கி உள்ளது.


கடந்த சனிக்கிழமை அரச தொலைக்காட்சியில் சாவேஸ் ஆற்றிய உரையில், கியூபா மற்றும் வெனிசுலா மருத்துவர்கள் எனக்கு மேலும் ஒரு கீமோதெரபி சிகிச்சை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளனர்" என்றார். இறப்பதற்கு இது நேரமல்ல. இன்னும் நிறையச் சாதிக்க வேண்டியுள்ளது என மேலும் கூறினார்

# மெழுகுவர்த்தியில் வைரம்!




வீட்டில் மின்சாரம் இல்லையென்றால் மட்டுமே மெழுகுவர்த்தியின் துணையை நாடுவோம். சில நேரங்களில் கவிஞர்கள், தன்னையே அழித்துக்கொண்டு ஒளிகொடுக்கும் மெழுகுவர்த்தியின் தியாகத்தைச் சொல்லிக் கவிதை எழுதுவதுண்டு. ஆனால் அந்த மெழுகுவர்த்தி ஒளியில் வைரங்கள் உள்ளன என்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மெழுகுவர்த்தி ஒளியில் ஒவ்வொரு விநாடிக்கும் பல இலட்சக் கணக்கான வைரத் துகள்கள் உருவாகிறதாம். ஆனால் அவை அடுத்த நொடியிலேயே காபனீரொட்சைட்டாக (கரியமில வாயு) மாறிவிடுகிறது. மெழுகுவர்த்தி ஒளியில் இருந்து வைரத்துகள்களை பிரித்தெடுக்கும் முறையைக் கண்டுபிடித்துவிட்டால், வைர உற்பத்தியாளர்களுக்கு இது பெரும் வரப்பிரசாதமாகும் என ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# எச்.ஐ.வி. பாதிப்பை கண்டறிய புதிய கருவி!



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள கொலம்பியா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் எச்.ஐ.வி. பாதிப்பைக் கண்டறியும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கருவி பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கருவி 100 சதவீதம் துல்லியமாகச் செயல்பட்டு எய்ட்ஸ் நோய் தாக்கப்பட்டுள்ளதா என 15 நிமிடங்களில் முடிவைத தெரிவித்து விடுகிறது. இதற்காக நிறையச் செலவும் ஆவதில்லை. அமெரிக்க மதிப்பில் வெறும் ஒரு டொலர் மட்டுமே இதற்காகச் செலவிட நேரிடும். மிகவும் எளிதாக கையாளகூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இக்கருவி கிரெடிட் கார்ட் வடிவில் அமைந்துள்ளது. இந்தக் கருவி மக்களிடம் அதிக வரவேற்பை பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# குடிபோதையில் கார் ஓட்டிய ஒபாமாவின் சித்தப்பா கைது



குடிபோதையில் கார் ஓட்டியதற்காக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் சித்தப்பா கைது செய்யப்பட்டார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தந்தையின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆன்யாங்கோ ஒபாமா(67). கடந்த வெள்ளிக்கிழமை ஆன்யாங்கோ குடிபோதையில் கார் ஓட்டினார். சிக்னலில் சிவப்பு விளக்கு எரிவதைக் கவனிக்காமல் ஓட்டிச் சென்று பொலிஸ் காரின் மீது மோதப் பார்த்தார். அப்போது அவரைப் பொலிசார் கைது செய்தனர். நீங்கள் யாருக்காவது போன் செய்ய விரும்புகிறீர்களா என்று பொலிசார் கேட்டதற்கு, வெள்ளை மாளிகையைத் தொடர்பு கொள்ள விரும்புகிறேன் என்று கூறியுள்ளார். அவர் கென்யாவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து அவரை குடியேற்ற அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர் மீது பிணையில் வெளியே வரமுடியாதவாறு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஜப்பானின் புதிய பிரதமர்



ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிஹிக்கோ நோடா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த 5 ஆண்டுகளில் 6ஆவது பிரதமராக தேர்வாகியுள்ள நோடாவிற்குப் பல சாவல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

ஜப்பானில் இந்த ஆண்டு நடந்த நிலநடுக்கம், சுனாமி, புக்குஷிமா அணுமின் நிலையக் கதிர்வீச்சுப் பாதிப்பு என அடுத்தடுத்துப் பல பேரிழப்புகளைச் சந்தித்து வருகிறது. இந்த இழப்புகளைக் களைய முன்னாள் பிரதமர் நவோட்டோ கான் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

புதுப்பித்தல் ஆற்றல் மசோதாவை நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்ற அவர், தொடர் நெருக்கடியால், கடந்த 26ஆம் திகதி தனது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்தார். இதனால், புதிய பிரதமராக்ப் பொறுப்பேற்க ஜப்பான் ஜனநாயகக் கடசியைச் சேர்ந்த 5 பேர் போட்டியிட்டனர். நேற்றுமுன்தினம் நடந்த தேர்தல் முடிவில், நோடாவுக்கு 215 வாக்குகளும், காய்எடாவுக்கு 177 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து நோடா அடுத்த பிரதமராக அறிவிக்கப்பட்டார். கடந்த 2010ஆம் ஆண்டு நோடா, ஜப்பானின் நிதியமைச்சராக இருந்து நிதிநிலையை உயர்த்தியவர்.

# ஜேம்ஸ் பொண்ட் மீண்டும் வருகிறார்




ஜேம்ஸ் பொண்ட் இரசிகர்களுக்கு மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய செய்தி. வருமா, வராதா என்ற இழுபறியில் இருந்துகொண்டிருந்த அடுத்த ஜேம்ஸ் பொண்ட் திரைப் படத்தின் வெளியீடு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 26, 2012இல் வருகிறார் ஜேம்ஸ் பொண்ட்-23.

சோனி பிக்சர்ஸ் இத்தகவலை உறுதிப்படுத்தியிருக்கின்றது. சில நாட்களுக்கு முன்னர்தான், அடுத்த ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தின் திட்டம் கைவிடப்பட்டது என செய்திகள் வெளியாகியிருந்தன. இனி ஜேம்ஸ் பொண்ட் திரைப்படங்களே வெளியாவது சாத்தியமில்லை என்றுகூட கூறப்பட்டது.

அந்தச் செய்திகளால், உலகெங்கிலுமுள்ள ஜேம்ஸ் பாண்ட் இரசிகர்கள் சோர்ந்து போயிருந்த நேரத்தில், ஜேம்ஸ் பொண்ட்-23ன் வெளியீட்டுத் திகதியை அறிவித்து, பொண்ட் இரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கின்றது சோனி பிக்சர்ஸ்.

## மீன்பிடி உபகரண தொழிற்சாலையை வடக்கில் அமைக்கும் இந்திய நிறுவனம்



(வவுனியா)

இந்திய நிறுவனமொன்று வடக்கில் தமது மீன்பிடி உபகரணத் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கவுள்ளதுடன், விதவைகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கவும் முன் வந்துள்ளது.

வடக்கில் ஓமந்தை பெரிய விளாத்திக்குளம் பகுதியில் 2 மில்லியன் ரூபா முதலீட்டில் தமது முதலாவது மீன்பிடித் தொழிற்சாலையை நிர்மாணித்து வருவ தாகவும் எதிர் காலத்தில் மேலும் பல தொழிற்சாலைகளை உருவாக்கி அதன் மூலம் பெருமளவு தொழில் வாய்ப்புகளை வடக்கு மக்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் அதன் திட்டப் பணிப்பாளர் பி. ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஓமந்தை பெரிய விளாத்திக்குளத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள மீன்பிடி உபகரணத் தொழிற்சாலையில் 200 பேருக்கு முதற்கட்டமாக வேலைவாய்ப்பை வழங்கப் போவதாக தெரிவித்த அவர், விதவைகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமையளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்

## மிகவும் மோசமான நிதி நெருக்கடியில் கிளி. மகாதேவா சைவச்சிறார் இல்லம்

### புலம்பெயர்ந்தவர்களை உதவுமாறு அழைப்பு

(கிளிநொச்சி)

இருநூற்று எண்பது ஆதரவற்ற சிறுவர்களைக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லம் மிகவும் நிதி நெருக்கடியில் உள்ளது. 145 பெண் பிள்ளைகளையும் 135 ஆண் பிள் ளைகளையும் கொண்டியங்கும் கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லமே இவ்வாறு பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது.

மேற்படி மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் உள்ள 280 மாணவர்களுக்கும் சிறார்களுக்குமாக ஒரு நாளைக்கு 40 ஆயிரம் ரூபா செலவாகிறது.

தற்போது பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதால் பெருமளவு பணத்தினை செலவு செய்து குறைந்த பொருட்களே கொள்வனவு செய்ய முடிகின்றது.

அத்துடன் பெண்களுக்கான உடுபுடைவைகள் சலவைக்கான தேவைகள், மற்றும் சுகாதாரம் கல்விக்காக பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டு மிக கஷ்டமுறும் சிறுவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு உடன் உதவும் திட்டத்தின் கீழ் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் அன்புள்ளங்களை உதவுமாறு மகாதேவா சைவச் சிறார் இல்லத் தலைவரும் மாகாண பொதுநிர்வாக பிரதி பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.


மேலும் சின்னஞ்சிறு சிறார்களின் வாழ்வு வளம்பெற அனைத்து விளையாட்டு, கல்வி மற்றும் சுகாதார உதவிகளையும் வழங்கி பாதிக்கப்பட்ட சின்னஞ் சிறார்களின் வாழ்வினை வளம்படுத்த உதவுமாறும் அவர் கேட்டுள்ளார்.

மேலும் பெண்கள் மிக நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருவதனால் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்பாடு செய்யவும் சிறந்த கல்வியைப் பெறவும் கட்டட வசதி மிக இன்றியமையாததாக உள்ளது.எனவே இத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய வெளிநாட்டு அன்பு உறவுகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்கள் கட்டட உதவியை வழங்கி உதவுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறார்களின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் கடந்த காலத்தில் கைகொடுத்து உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் மிகப் பெரிய நன்றிகளையும் மகாதேவா ஆச்சிரமத் தலைவர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் அதிகரித்த வீதிவிபத்திற்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

முறையான நேர அட்டவணை இல்லாமையும் சட்ட விரோதமான முறையில் போக்குவரத்து வழித்தட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதினாலுமே வீதிகளில் அதிகமான பேருந்து விபத்துக்கள் ஏற்படக்காரணம் எனத் தெரிவித்துள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இவ்வாறான விபத்துக்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் தனியார் பேருந்து உரி மையாளர்கள் சங்கத்தினர் ஏற்பாடு செய் திருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கெமுனு விஜேரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்று பல பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் 30 பேருந்துகள் கொழும்பு யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. பேருந்துகளுக்கு தொழிலநுட்பக் கருவிகளைப் பொருத்தவேண்டும் என கூறிக்கொண்டிருப்பதனை விடுத்து முதலில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராயவேண்டும்.

இதில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. அதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன.

முறையான நேர அட்ட வணை இல்லாமையினாலும் விபத்துக்கள் அதிகரிக்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது ஒன்றிணைந்த நேர அட்டவணையைத் தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தார். ஆனால் 6 வருடங்கள் கடந்துள்ளபோதும் இதுவரை நேரஅட்டவணை அமுல்படுத்தப்படவில்லை.

இதனால் யாழ். கொழும்பு பேருந்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்து புறப்படும்போதும் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும்போதும் நேர அட்டவணையின் படி செயற்படுவதில்லை. இதேவேளை, நாட்டில் பல பிரதேசங்களில் பேருந்துகள் போட்டி போட்டுக்கொண்டு செல்கின்றன. சில இடங்களில் பேருந்துகள் ஆமை வேகத்தில் செல்வதோடு பேருந்து தரிப்பு நிலையங்களில் நீண்ட நேரத்திற்கு தரித்து நிற்கின்றன.

இதற்கு பொதுப் போக்குவரத்து அபிவிருத்தி செய்யப்படாமை மற்றும் முறையான நேர அட்டவணையும் இல்லாமையுமே காரணமாக அமைந்துள்ளன.

இதேவேளை, இத்தகைய காரணங்களினால் வீதிகளில் விபத்துக்களும் ஏற்படுகின்றன. விபத்துக்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டியுள்ளது. இதில் 95 வீதம் போக்குவரத்து அதிகாரிகள் பொறுப்புகூற வேண்டியுள்ளது.

தற்போது நாட்டில் யுத்தத்தையும் விட வாகன விபத்தினால் ஏற்படும் மரணங்களும் காயப்படுபவர்களின் தொகைகளும் அதிகரித்துச் செல்கின்றன. வருடத்திற்கு 5 ஆயிரம் பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாவதுடன், நாளொன்றுக்கு 7 பேர் இறக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

## நெற்பயிரில் நோய்த்தாக்கம் கட்டுப்படுத்த பி.டீ.பக்ரீரியா



நெற்செய்கையை பாதிக்கும் நோய்த் தாக்கங்களை கட்டுப்படுத்த பீ.டீ பக்ரீரியாவை பயன்படுத்த முடியும் என இலங்கை ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பீ,டீ பக்ரீரியாவின் பல வகைகள் கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி ரதிக்க சமரசேகர குறிப்பிடுகின்ஙறார்.

அதற்கமைய நெற் பயிர்ச்செய்கையை பாதிக்கும் நோய்த்தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உயிர் பல்வகைமைக்கு பாதுகாப்பாகவும் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் இந்த பக்ரீரியா கண்டறியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய ஆய்வு நிறுவனத்திடம் நிதி கோரப்பட்டுள்ளதாகவும் இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி ரதிக்கா சமரசேகர மேலும் தெரிவிததார்

## அண்மைக்காலமாக அதிகரித்துள்ள சிறுமிகள் காணாமற் போகும் சம்பவம்

சிறுமிகள் காணாமல் போகும் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அதிகளவான சிறுமிகள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளம் சிறுமிகள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்படுள்ளது.

அநேகமான இளம் சிறுமிகள் ஆண் நண்பர்களுடன் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறிச் செல்லும் சிறுமிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பாலியல் தொழிலில் இளம் பெண்களை ஈடுபடுத்தும் நோக்கில் சில கும்பல்கள் நாட்டில் இயங்கி வருவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்

## யுத்த காலத்தில் காணி உறுதிகளை மோசடி செய்த அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

யுத்தம் இடம் பெற்ற காலத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஒருவருடைய காணியை சட்விரோதமான முறையில் இன்னொருவருக்கு உரிமை மாற்றிக் கொடுத்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது

இவ்வாறு சட்டவிரேதமான முறையில் காணி உரிமம் மாற்றம் செய்வதற்கு புலிகள் இயக்கம் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் வற்புறுத்தியுள்ளதாக அண்மையில் பாதுகாப்புத் தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது தெரிய வந்துள்ளது.

யுத்தத்தின் காரணமாக ஊரை விட்டும் நிலத்தை விட்டும் வேறு பிரதேசங்களுக்கு சென்றவர்கள் அல்லது வெளிநாடுகளுக்கு சென்ற காணி உரிமையாளர்களடமிருந்து இது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்தவாறு இருப்பதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

## தரங்குறைந்த பெற்றோல் பயன்படுத்தியதால் பழுதடைந்த வாகனங்களுக்கு நட்ட ஈடு

(கொழும்பு)

தரம் குறைந்த பெற்றோலைப் பயன்படுத்தியதால் பழுதடைந்த வாகனங்களின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தரம் குறைந்த பெற்றோல் பாவனையால் ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பில் ஆராய்வதற்காக் நியமிக்கப்பட்ட குழு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பரிந்துரை செய்துள்ளது.

சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை பெற்றோல் விநியோக நிறுவனம் ஊடாக ஈடு செய்ய வேண்டும் எனவும் அந்தக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்வதற்கு விநியோக நிறுவனம் தவறும் பட்சத்தில் பொறுப்புமிக்க அதிகாரிகளிடம் இருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஜூன் மாதம் இறக்குமதி செய்த 20 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலின் தரம் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

இந்தப் பெற்றோலை பயன்படுத்தியதால் வாகன உரிமையாளர்கள் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக எம்.எம்.ஃ.பேர்டினாண்டோவின் தலைமையிலான மூவரடங்கிய குழுவொன்றை எரிபொருள் வளத்துறை அமைச்சு நியமித்திருந்தது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை அமைச்சர் சுசில் பிறேம ஜயந்தவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# இந்திய வீடமைப்புத் திட்டம் மேன்முறையீடு செய்ய வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய உதவியுடன் யாழில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தில் யுத்தத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. எனினும் இது சம்பந்தமான பொதுமக்களின் ஆட்சேபனைகளை பிரதேச செயலர்களுக்கு தெரியப்படுத்தலாம் என்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 2000 வீடுகளைப் புனரமைப்பதற்கும், 5250 வீடுகளை நிர்மாணிப்பதற்கும் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பிரதேச கங்களுக்கு பட்டியல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பயனாளிகள் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து மீளக்குடியமர்ந்தவர்களும் அண்மைக்காலங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்தவர்களும் என முன்னுரிமைப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயனாளிகள் தெரிவின்போதும் அனர்த்தத்தின் போது கணவனை இழந்த விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்களையும், அனர்த்தத்தின்போது குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களையும், அல்லது காயமடைந்தவர்களையும் அல்லது காணாமல் போனவர்களைக் கொண்ட குடும்பங்களையும் மற்றும் அனர்த்தத்தின் போதல்லாத நிலையில் கணவனை இழந்த விதவைகள் தலைமை தாங்கும் குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்களில் பெண் பிள்ளைகளை அதிகமாகக் கொண்ட குடும்பங்களையும், குடும்ப உறுப்பினர்கள் அதிகமாகக் கொண்ட குடும்பங்களையும், வலுவிழந்தோரை குடும்ப உறுப்பினர்களாகக் கொண்ட குடும்பங்களையும், இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமடைந்த குடும்பங்களையும் ஏனைய மனிதாபிமான நிலையில் தகுதிவாய்ந்த பயனாளிகளையும் உள்ளடக்கி பயனாளிகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பயனாளிகளின் விபரங்கள் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி பயனாளிகள் பட்டியல்களில் குடும்பத் தலைவரோ அல்லது குடும்ப அங்கத்தவர்களோ அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்கும் பட்சத்தில் அல்லது மேற்படி பயனாளிகளுக்கு வேறு திட்டங்களின் மூலம் வீடமைப்புத் திட்டம் கிடைத்திருந்தாலோ அல்லது ஏனைய மாவட்டத்திலோ ஏனைய பிரிவிலோ வீடு இருந்தாலோ, வருமானம் உயர்ந்தவராக இருந்தாலோ அல்லது அவர்களின் பிள்ளைகள் ஐரோப்பிய, அமெரிக்க, ஐக்கிய இராச்சிய நாடுகளில் வசிப்போராக வருமானம் பெறுபவராக இருந்தாலோ அல்லது கனரக வாகனங்களை அசையும் அசையாச் சொத்துக்களை அதிகளவில் வைத்திருப்பவர்களையோ தவிர்க்குமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பயனாளிகள் பட்டியலில் உள்ள பயனாளிகள் தெரிவு தொடர்பாக பொதுமக்கள் ஏதேனும் ஆட்சேபம் தெரிவிக்க விரும்பின் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களிடம் தெரிவிக்குமாறு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பாகிஸ்தான் சீமெந்துக்கு நீங்கியது தடை


(கொழும்பு)

வெளிநாட்டு ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை அடுத்து பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்து இருப்புக்கான தடை நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# மின்சக்திப் பரிமாற்றம் இலங்கை - இந்தியா இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் மின்சக்தியை பரிமாற்றிக் கொள்வதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிடுகின்றது.



இது தொடர்பான நடவடிக்கைகள் எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும் என உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கைக்குத் தேவையான மின்சக்தியை இந்தியாவில் இருந்து பெற்றுக் கொள்ள முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்படுமென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் நம்பிக்கை நமபிக்கை வெளியிட்டுள்ளார்.

# விவசாயக் கண்காட்சியும் வினா விடைப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள விவசாயக் கண்காட்சியில் பாடசாலைகளுக்கான வினாவிடைப் போட்டி ஒவ்வொரு தினமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியின் போது விவசாயக் கண்காட்சியில் காட்டப்படவுள்ள தொழில்நுட்ப விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் விவசாய உற்பத்தி புள்ளிவிபரங்களும், தகவல்களை உள்ளடக்கியதாக விடயங்கள் மற்றும் மண் சம்பந்தமான பிரச்சினைக்குரிய தீர்வுகள் என விடயங்கள் காட்டப்படவுள்ளன. மேலும் பயிர்ச்செய்கை முறை, வீட்டுத்தோட்டம், விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் வெளிப்பாடுகள், விவசாய வங்கிக்கடன், காப்புறுதி பற்றிய விளக்கங்கள் என்பன காட்டப்படவுள்ளன.

எனவே இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் ஒவ்வொன்றும் 5 மாணவர்களை இதில் ஈடுபடுத்த முடியும்.

இதற்கு முன்னாயத்தமாக பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பங்களை அனுப்பி போட்டிக்கான முன்னனுமதியைப் பெறலாம். விண்ணப்பிக்கும் பாடசாலைகளில் 2 பாடசாலைகள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு தினமும் போட்டிகள் நடைபெறும். இறுதியாக வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு பெறுமதியான பரிசில் வழங்கப்படும். (எப்.எஸ்)

## விபத்தில் சிக்கினார் வயோதிபப் பெண்

பஸ்ஸில் ஏற முற்பட்டபோது தவறிவீழ்ந்து வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மூத்த விநாயகர் கோவிலடியில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் பருத்தித்துறை செல்வதற்காக தனியார் பஸ்ஸில் ஏற முற்பட்டபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த ரட்ணம் அன்னலட்சுமி (வயது-55) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# ரிஸானாவின் போலித் தந்தை கைது

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை பெற்றுள்ள ரிஸானா நபீக்கை வெளிநாட்டுக்கு அனுப்பவென சட்டவிரோதமான முறையில் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் செய்த முறைப்பாட்டை அடுத்து இரகசிய பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டார்.

ரிஸானா நபீக்கின் தந்தை போன்று குறித்த சந்தேகநபர் நடித்துள்ளதாக இதன்போது கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி அடையாளம் காணப்பட்ட சந்தேகநபரையும் மற்றுமொருவரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வவுனியா நகரில் புதிய பஸ் நிலையம்

(வவுனியா)

வவுனியா - தாண்டிகுளம் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய பஸ் நிலையத்திற்கான ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி.ரத்நாயக்கா தலைமையில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது. கட்டட வேலைகள் நிறைவு பெற்றதும் வெளி இடங்களுக்கு செல்லும் சகல பஸ்களும் புதிய பஸ் நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பல இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில் கொலை...

6 மாதங்களாகக் காதலித்து வந்ததாகவும், யுவதி குறித்த இளைஞரைக் கைவிட்டு வேறு ஒருவருடன் காதல் தொடர்பை மேற்கொண்டதைத் தொடர்ந்தே குறித்த நீர்கொழும்பு இளைஞர் யுவதியைக் கத்தியால் குத்தி கொலைசெய்ய முற்பட்டிருக்கிறார்.

இதன்போது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்தி குறித்த இளைஞரைக் கைதுசெய்துள்ளனர். இவர் மீது கொலைமுயற்சிக்கான வழக்கு பதிவுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எஸ்)

## ஆட்சிமுறையில்....

ஏற்றுக்கெள்ளக்கூடிய ஆட்சிமுறையொன்று கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலமே மக்களுக்கு விமோசனம் கிடைக்கும். அவசரகாலச்சட்டம் நீக்கப்படுகின்றமையால் மக்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவது இல்லை என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிடுகிறார்.

இந்நிலையில் நாடாளுமன்ற தெரிவுக்குழு தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், அரசாங்கம் தெரிவுக்குழு ஒன்று பற்றி சிந்திப்பதாக தகவல் கிடைத்துள்ளது. அது சம்பந்தமாக இது வரை நாம் முடிவை எடுக்கவில்லை, காரணம் அது என்ன அடிப்படையில் அமையும், என்ன குறிக்கோளை வைத்து அது அமையும் என்ற ஒரு தெளிவு தேவை எனக் குறிப்பிட்டார்.

அவசரகால சட்டம் நீக்கப்பட்டமையை நாம் வரவேற்கிறோம். இந்த சட்டம் நாட்டு மக்கள் அனைவருக்குமே தீமையான விடயம். அவசரகால சட்டம் நீக்கப்பட்டதால் எல்லாம் முடிந்துவிட்டது எனக் கூறமுடியாது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல அதிகாரங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

## அமைதிக்கு அச்சுறுத்தல்...

இதுதவிர இவைகள் குறித்த பொய்யான வதந்திகளும் திட்டமிடப்பட்ட வகையில் பரப்பப்பட்டு பதற்றம் நிறைந்த ஒரு சூழலை உருவாக்கும் கபட நாடகங்களும் அரங்கேறி வருகின்றன.

கொடிய வன்முறைக் கலாசாரம் என்பது மறுபடியும் இங்கு உருவாகி விடாமல் தடுப்பது அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு படையினருக்கும் எமது மக்களுக்கும் இடையிலான நல்லுறவை வளர்ப்பது அதன் ஊடாக அமைதி வழி நின்று இணக்கமான அரசியல் மூலம் எமது மக்களுக்கான சகல உரிமைகளையும் பெறுவது அழிந்து போன எமது வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் தூக்கி நிறுத்துவது. இவைகளுக்காகவே நாம் இன்று நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் உழைத்து வருகின்றோம்.

மர்ம மனிதன் குறித்த பீதி எமது மக்களை விட்டு விரைவாக அகற்றப்பட வேண்டும் என்றும் சட்டம் ஒழுங்கு மற்றும் தனிமனித பாதுகாப்பு போன்றவை நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் திட்டமிட்டமிட்ட வதந்திகள் பரப்பப்படுவதற்கான சூழல் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் நாம் அரசாங்க உயர்மட்ட பிரதிநிதிகளோடு தொடர்பு கொண்டு வலியுறுத்தி வருகின்றோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த கால பேரழிவு என்ற பெரும்புயலில் இருந்து மீட்டு வரப்பட்ட எமது மக்கள் இன்று புதிதாக நிலவும் நெருக்கடிகளில் இருந்தும் விரைவாக மீட்கப்படுவார்கள் என்பது உறுதி என்றும் இது குறித்த நம்பிக்கையோடு அனைவரும் சேர்ந்துழைப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## செய்திப்பாணம்

**அவசரகால சட்டமும் அகன்றதென் அப்பாடா!**
**கவசமாய் மாதாமாதம் கட்டுண்டோர் - தவமதும்**
**பனுவலாய் விளங்கும் பயங்கரவா தச்சட்டம்**
**அனுமனின் வாலாகும் அணி!**



# போக்குவரத்து ஆணைக்குழு வவுனியாவில் அலுவலகம்




(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வட பிராந்திய அலுவலகம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை திறந்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்வு தனியார் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் 20 ஆயிரத்து 400 தனியார் பஸ்களும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான நான்காயிரத்து 800 பஸ்களும் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார். எவ்வாறாயினும் மக்களுக்கான போக்குவரத்து சேவைகள் திருப்திகரமாக அமையவில்லை என குறிப்பிட்ட அவர் சகல மாகாணங்கங்களிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகங்களை அமைத்து சிறந்த போக்குவரத்து சேவையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

# சுகாதாரப் பிரச்சினை தயாராகிறது அறிக்கை

அனைத்து மாகாண சபைகளிலும் நிலவும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பிலான முதற்கட்ட கலந்துரையாடல் அண்மையில் சிலாபத்தில் நடைபெற்றுள்ளதாக மேல் மாகாண சுகாதார அமைச்சர் ஜகத் அங்கசே குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய தமது மகாணங்களின் சுகாதார சேவை யில் நிலவும் பௌதீக மனித வளங்களின் பற்றாக்குறை தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வரவு செலவு திட்டத்திற்கு முன்னர் இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் இதன் நோக்கமெனவும் அமைச்சர் குறிப்பிடுகிறார்.

# இலங்கை தமிழர் பிரச்சினை[...] இந்தியாவிடம் சொல்வது எப்ப[...]

(சென்னை)

தமிழர் பிரச்சினையை இந்திய அரசிடம் எப்படி எடுத்துச் சொல்வது என்பது குறித்த புதிய பொறிமுறை ஒன்று வகுக்கப்படவுள்ளது.

புதுடில்லி மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியா சென்ற தமிழ் அரசியற் கட்சி சென்னையில் மீண்டும் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டன.

இச்சந்திப்பின்போதே மேற்படி புதிய பொறிமுறை ஒன்றை வகுத்துக்கொள்வது குறித்து ஆராயப்பட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா அணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டி.எல்.எப்.) ஆகிய நான்கு தமிழ்க் கட்சிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டன.

மேற்படி புதிய பொற[...] தொடர்பாக எமது நாட்[...] உலக நாடுகளிலும் [...] அறிவு ஜீவிகளின் ஒருங்[...] பையும், ஆலோசனை[...] பெறுவதென்றும், தமிழர் [...] களை வென்றெடுப்பதற்[...] வகையில் கூட்டுத் த[...] ஒன்றினை ஏற்படுத்துவது [...] பாக அடுத்த மாதம் [...] சந்தித்துப் பேச்சுவார்த்[...] துவதென்றும் தீர்மானிக்கப்[...]

## மனித உரிமை குழுவில் முறைப்பாடு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் மாணவி ஒருவர் காணாமற்போன சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் காரியாலயத்தில் உறவினர்களால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி இமையாணன் குஞ்சர் கடைப்பகுதியில் வசித்து வரும் கனகலிங்கம் லக்ஷனா (வயது-13) என்ற மாணவியே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (பா)

## சுற்றுலாப் பயண வியத்தில் மர[...]

(கொழும்பு)

டயகம பகுதியில் உள்ள உலக முடிவு என்ற இடத்தைப் பார்க்கச் சென்ற அவுஸ்திரேலிய சுற்றுலாப் பயணியொருவர் சறுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் 53 வயதுடைய கிரிஸ்தோபர் பில்தர் என்பவர் ஆவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் தனது மனைவி உ[...] பேருடன் உலக முடிவைப[...] கச் சென்று புகைப்பட[...] றினை எடுக்க தயாராகிய[...] சறுக்கி விழுந்து உயிரி[...] பொலிஸார் தெரிவித்[...] சடலம் பலாங்கொடை [...] வெவ அருகில் உள்ள த[...] பகுதியில் இருக்கலாம்[...] பொலிஸார் சந்தேகம் வெ[...] டுள்ளனர்.

## யாழ்.நகரில் நேற்று[...] சர்வமத பிரார்த்தனை[...]



இலங்கையின் 12 மாவட்டங்களைச் சேர்ந்த சர்வமத கு[...] உள்ளடக்கிய குழுவினர் நேற்று யாழ்.நகரில் சமாதானப் [...] தனை ஒன்றை நடாத்தியதுடன், நாவாந்துறைப் பகுதிக்கும் [...] செய்து அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் க[...] யாடியதாகவும் தெரியவருகின்றது.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஒருங்கிணை[...] யாழ்.மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் குறித்த [...] குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டி[...]

இக்குழுவினர் நேற்றுக்காலை 9.00 மணியளவில் யா[...] மண்டபத்தில் நடைபெற்ற சமாதானப் பிரார்த்தனை நிகழ்[...] கலந்து கொண்டனர். இப்பிரார்த்தனை நிகழ்வுகளின் போது[...] கையின் சகல இனங்களுக்கும் வன்முறையற்ற வாழ்வு [...] பிரார்த்தித்துக் கொண்டனர்.

இந்துக் குருமார், பௌத்த குருமார், அருட் தந்தை[...] முஸ்லிம் மதகுரு, கன்னியாஸ்திரிகள் ஆகியோர் பெரு[...] நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். அத்துடன் அரச சார்ப[...] வனப் பிரதிநிதி, பெண்கள் அமைப்புப் பிரதிநிதி, தேசிய [...] ஒத்துழைப்பு அமைப்பு, இலங்கை மனித உரிமை ஆணை[...] பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வியாபாரிகளினால் அசௌகரியம் தடுக்க தயாராகிறது மாநகரசபை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் அமைந்துள்ள கடை உரிமையாளர்கள் வியாபாரப் பொருட்களை நடைபாதைகளில் வைத்து விற்பனை செய்வதால் பொது மக்களின் வீதிப்போக்குவரத்து பாதிக்கப்படுவதாகவும் இதனால் போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு நேற்று நண்பகல் அளவில் முச்சக்கரவண்டியில் ஒலி பெருக்கி உதவியுடன் மாநகரசபையினர் பொது அறிவித்தல் ஒன்றை நகரில் விடுத்தனர்.

குறிப்பாக ஸ்ரான்லி வீதி, கே. கே.எஸ் வீதி, பஸ்தரிப்பு நிலைய வீதி, மின்சார சபை வீதிகளில் உள்ள வியாபார நிலையங்களின் உரிமையாளர் கள் தங்களது விற்பனைப் பொருட்களை கடைக்கு வெளியில் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடை உரிமையாளர்களுக்கு பல தடவைகள் அறிவித்தும் வியாபாரிகள் அதனைப் பொருட்படுத்தவில்லை.

இவ்வாறான தடுத்து நிறுத்துவதற்கு தற்போது மாநகர சபையின் அதிகாரிகள் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதன்பிரகாரம் யாழ்.மாநகர சபை எதிர்வரும் முதலாம் திகதிக்கு பின்னர் தொடர்ந்து அறிவித்தலை மீறும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. (எப்.எஸ்)

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகவேல் ஆச்சாரி கமலவல்லி நேற்று முன்தினம் (29.08.2011) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா ஆச்சாரி சிதாலக்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா ஆச்சாரி வேலம்மாள் தம்பதியரின் மருமகளும், சண்முகவேல் ஆச்சாரியின் அன்பு மனைவியும், சுந்தரவல்லி புஸ்பவல்லி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரசேகரன் (HNB Assurance), பாலா சுரேஸ், கண்ணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், யசிந்தா, சித்திரா, ரேவதி ஆகியோரின் பாசமிகு மாமியும், நிசாந்திரா சேகரம் கஜனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2011) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.30 ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல் : ச.சந்திரசேகரன்
(மகன்)

## பிரதேசசபையின் கன்னி அமர்வு

(ஆனைக்கோட்டை)


வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் முதலாவது கூட்டம் நாளை வியாழக்கிமை காலை 10.00 மணிக்குப் பிரதேச சபை ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் சபையின் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்ட அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றீட்டிய உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள் ளனர். இதில் வட்டார ரீதியாக மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி பணிகள் குறித்த விடயங்களும் ஆராயப்படவுள்ளது. (104)

## பொலிஸிடம் தப்பியவர் நீரில் மூழ்கி மரணம்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுவொன்றின் தலைவரான நேவி அசங்க, களனி கங்கையில் மூழ்கி இறந்துள்ளார். பொலிஸாரிடமிருந்து தப்பியோட முயன்றபோதே அவர் நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்டு வ[...] மேற்கு பிரதேச சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவகு[...] கிருஷ்ணன் (ஜீவன்), செல்வகுமார், சிறீதரன் ஆகியோர் [...] சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களால் வர[...] பட்டனர். அந்நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படத்தினைக் கா[...]

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்[...]